12 பக்கங்கள் விலை 50 காசு

# நம் நாடு

ஆசிரியர்: மு. கருணாநிதி

"NAM NADU" Official Organ of the D. M. K.

மலர்-2 | திருவள்ளுவர் ஆண்டு 2009 31—12—1978 | இதழ் —16

# ஜனவரி - இருபத்தாறு

இந்தித் திணிப்பை இதுவரையில் எதிர்த்துக் கொண்டு இருந்த தி. மு. கழகம் இன்றைக்கு இந்தியையேஎதிர்க்கிறது என்று கூறுகிறீர்களே, ஏன் இந்த வேறுபாடு என்று சிலர் நினைக்கலாம். அந்த ஐயப்பாடுகளை விளக்கும் வகையில்தான் பேராசிரியர் இங்கே படித்துக் காட்டிய தீர்மானத்தின் பல வாசகங்கள் அமைக்கப் பட்டு இருக்கின்றன.

இன்றைக்குமத்தியிலே ஆளவருபவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் இந்திராகாந்தி அம்மையாராக இருந்தாலும், மொரார்ஜி தேசாயாக இருந்தாலும் அவர்கள் தமிழ்நாட்டிற்கு வந்தால், அல்லது தமிழ்நாட்டு மக்கள் குரல் எழுப்பினால், அல்லது இந்தி பேசாத மாநிலங்கள் கேட்டால், அல்லது நாம் இந்தி திணிக்கப்படுகிறது என்று சொன்னால் —அவர்கள் மிக சாதுரியமாக ஏமாற்று கின்ற வழி — நாங்கள் இந்தியைத் திணிக்கவே இல்லை என்கிற ஒரு வாக்குறுதியைச் சொல்லிமறைமுகமாக இந்தியைத் திணித்துக் கொண்டே இருக்கிறார்கள். ஆகவே தான் இந்தித் திணிப்பை எதிர்ப்போம் என்று நாம் சொல்லுகிற நேரத்தில் அந்தத் திணிப்பு என்ற வார்த்தைக்குப் பின்னால் பதுங்கிக்கொண்டு "நாங்களா, இந்தியைத் திணிப்பதா? சத்தியமாகஇல்லை" என்றுதப்பித்துக்கொள்ளப் பார்க்கிறார்கள். ஆகவே தான் தி. மு. கழகம் திட்டவட்டமாகச் சொல்கிறது.


இதே திருச்சியில்தான் தி. மு. கழகம் ஐந்து முழக்கங்களை வடித்து எடுத்து அறிவித்தது அதிலே ஒன்றுதான் இந்தித் திணிப்பை என்றும் எதிர்ப்போம் என்பது.


நாம் இன்றைக்கு, அன்று எழுப்பிய முழக்கத்தில் ஒரு திருத்தத்தைச் செய்கிறோம்.

இந்தித் திணிப்பை என்றும் எதிர்ப்போம் என்பதற்குப் பதிலாக இந்தி நுழைவை என்றும் எதிர்ப்போம் என்று நாம் நம்முடைய முழக்கத்தை மாற்றிக் கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். ஏனென்றால் திணிப்பு என்ற பெயரால் நாம் நம்முடைய எதிர்ப்பைக் காட்டிய நேரத்தில் திணிப்பு இல்லை என்று கூறிக் கொண்டு மறைமுகமாக இந்தியைத்திணிக்கிறகாரியம் இன்றைக்குத் தமிழகத்திலே இந்தி பேசாத மாநிலங்களிலே தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது.

நாம் நம்முடைய நண்பர்கள் இந்தியை எதிர்க்கின்ற உணர்ச்சி மாத்திரமல்ல, நம்முடைய

(தொடர்ச்சி 2ம் பக்கம்)





அலைகடலென ஆர்த்தெழுந்த தமிழ்ச் சிங்கக் கூட்டம் — (இந்தி எதிர்ப்பு மாநாட்டு ஊர்வலக் காட்சி.)

# அண்ணா காட்டிய வழியில்...

## ஜனவரி 26] ]முதற்பக்கத் தொடர்ச்சி

மொழியை, கலாச்சாரத்தைக் காக்கின்ற உணர்வுதான் இந்தத் தீர்மானத்திற்குக் காரணம்.

அரசியல் சட்டம் 29(1) பிரிவு என்ன சொல்லுகிறது என்ருல் இந்தியாவில் வாழ்கின்ற அல்லது அதன் ஏதேனும் ஒரு பகுதியில் வாழ்கின்ற எந்தப் பிரிவு குடிமக்களாவது அவர்களுக்கு என்று தனி மொழி, கலாச்சாரம்ஆகியவைகளைக் கொண்டுஇருந்தால் அதைக் காப்பாற்றிக் கொள்ளும் உரிமை அவர்களுக்கு உண்டு என்று அரசியல் சட்டம் கூறுகிறது

நாம் இந்தியை எதிர்க்கிருேம் என்பதற்காக மாத்திரமல்ல. நம்முடைய தமிழ் மொழி, தாய் மொழி மங்கை ஒருத்தி தரும் சுகமும் எங்கள் மாத்தமிழுக்கு ஈடில்லை'' என்று சொன்ஞரே புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், அந்தத் தமிழ் மொழி, அந்த மொழிஉருவாக்கிய கலாச்சாரம் ஆகியவற்றைக் காப்பாற்ற நாம இன்றைக்கு போர்க்கொடி ஏந்த வேண்டிய கட்டத்திற்கு வந்து இருக்கிருேம்.

இந்தத் தீர்மானத்தினுடைய இறுதிக் கட்டமாக நான் சொல்லப் போகிற வார்த்தைகள் நானே சொல்லி விடுவதல்ல தலைமைக் கழகத்தைக் கலந்து, பேராசிரியரைக் கலந்து கழகப்பொருளாளரைக்கலந்து துணைப் பொதுச் செயலாளரைக் கலந்து மாநாட்டுத் தலைவரைக் கலந்து. தலைமைக் கழகச் செயலாளர்களைக் கலந்து அறிவிக்கின்ற போராட்டமுறை.

மத்திய அரசைப் பணிய வைக்க நாம் உடனடியாக கிளர்ச்சியில் ஈடுபடப் போவதில்லை என்ருலும் ஈடுபடப்போகிருேம். 'செந்தமிழுக்கு ஒரு தீங்கு வந்த பின்னும் இந்தத் தேகம் இருந்து ஒரு இலாபம் உண்டோ' என்றுகேட்கப் போகிருேம்.

அதற்கு அறிகுறியாக அண்ணா காட்டிய வழி ஒன்று இருக்கிறது. 1965-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 26-ஆம்நாள் குடியரசு நாளைக்கண்டன நாளாக அறிவித்து, எங்கெங்கும் கறுப்புக்கொடி ஏற்றுங்கள் என்றுஅண்ணா சொன்ஞர். அதற்கு முதல் நாள் ஜனவரி 25-விளக்கக் கூட்டங்களை நடத்துங்கள் என்று சொன்ஞர்.

அதே அண்ணா வழியைப் பின்பற்றி - என்ன நடவடிக்கைகள் நம் மீது மேற்கொள்ளப பட்டாலும் — மேற்கொள்ளமாட்டார்கள், இன்று அரசு நடத்துகிறவர்கள் இந்தியை எதிர்க்கிறவர்கள் என்று சொல்லிக் கொள்கிறவர்கள் ஆகவே 1979 ஆம் ஆண்டிலும் அண்ணாவின் வழியைப் பின்பற்றி ஜனவரி 26-ஆம் நாள்கறுப்புக் கொடிநமது கழகத்தோழர்கள் இல்லங்கள் தோறும் பறந்திடவேண்டும். தமிழகத்தின் வீதிகள்தோறும் கறுப்புக்கொடி தோரணங்கள் கட்டப்பட வேண்டும் கழகத் தோழர்கள்எல்லாம் கறுப்புச்சட்டை அல்லது கறுப்புத் துண்டு அணிந்து ஒவ்வொருஊரிலும்மௌன ஊர்வலங்கள் நடத்த வேண்டும்.

மறைமுகமாக இந்தி நுழைக்கப்படுவதை எதிர்த்து நம்முடையமனக் குறையைக்காட்டிக்கொள்கிற நாள்ஜனவரி 26-ஆம் நாள். 1965-ஆம் ஆண்டு அண்ணா அவர்கள்ஜனவரி 26-ஆம் நாளை அறிவித்தார்கள். அதற்கு முதல் நாள் பல மாணவர்கள் அன்றைய ஆட்சியின் கொடுமைக்குப் பலியாஞர்கள். அடக்கு முறைக்கு ஆளாகி பல்லாயிரக்கணக்கானவர்கள் கைது செய்யப்பட்டார்கள்.

அந்த நாளை, ஜனவரி 25-ஆம் நாளை நம்முடைய மாணவர் தி. மு. கழக அமைப்பு இதுவரையில் தியாகிகள் நாளாகக் கொண்டாடியது.

இந்த ஆண்டு ஜனவரி 25-ஆம் நாளை மாணவர்கள் அமைப்பு மாத்திரம் அல்ல, இந்த மாநிலம் முழுவதும்இருக்கிற தி மு. கழகத்தின் கிளை அமைப்புக்கள் இந்தி எதிர்ப்புத் தியாகிகள் நாளைக்கொண்டாடவேண்டும்.

பேராசிரியர் முன்முன் மொழிந்த இந்தத் தீர்மானத்தை அன்று அந்தக் கூட்டங்களில் நிறைவேற்றியாக வேண்டும்

ஜனவரி 26-ல் நடத்தலாமா? என்று கேட்டால் அதற்கு முன்மாதிரியாக ஒருவர்இருக்கிருர்.மேற்கு வங்கத்தில் முதலமைச்சராக இருந்த டாக்டர் பி. சி. ராய் மத்திய அரசை எதிர்த்து சுதந்திர தினத்தை துக்க நாள் என்று ஒருமுறை அறிவித்தார்.

அன்று அரசாங்க விழாக்கள், அலங்காரங்கள் இவைகளெல்லாம் கிடையாது என்று சொன்ஞர். அதை மீறி மேற்கு வங்கத்தில் அப்போது இருந்த கவர்னர் ராஜ பவனத்தில் மின் விளக்கு அலங்காரங்களைச் செய்து விழாக் கொண்டாடத் தொடங்கிஞர். ஆஞல் முதலமைச்சர் டாக்டர் பி. சி. ராய் என்ன செய்தார் தெரியுமா? ராஜ் பவனத்திற்கான மின் இணைப்பையே துண்டித்து விட்டார். விழா நடத்தக் கூடாது என்று. அதைத் தமிழக அரசுக்குக் கவனப் படுத்துகிறேன்.

எங்களோடு தமிழக அரசும் ஜனவரி 26 ஆம் நாளைக் கண்டன நாளாக நடத்துவதற்கு ஒத்துழைக்கும் என்று நம்புகிறேன். ஏனென்ருல் அண்ணா வழியில் இந்தப் போராட்டத்தைத் தேர்ந்தெடுத்து அறிவித்து இருக்கிருேம் என்று கூறிக் கொள்கிறேன்.

திருச்சி இந்தி எதிர்ப்பு மாநாட்டில்
தலைவர் கலைஞர்

# விருதை பெரியார் மறைவு:

## கலைஞர், பேராசிரியர் இரங்கல்

பழம்பெரும் நீதிக் கட்சியின் முன்னேடிகளில் ஒருவராக விளங்கியவரும் மாநிலங்களவையின் முன்ஞள் தி. மு. க. உறுப்பினரும், விருதைப் பெரியார் என்று அழைக்கப்பட்டவருமான திருவி.வி.ராமசாமி அவர்கள் மறைந்த செய்தி கேட்டு கழகத் தலைவர் கலைஞர், பொதுச் செயலாளர் பேராசிரியர், ஆகியோர் விடுத்த செய்தி வருமாறு:

### கலைஞர்

தன்மான இயக்கத்திதில் நீண்ட நாட்களாக ஈடுபட்டு பெரியாரின் அருமைத் தொண்டராகவும், அண்ணாவின் அன்புக்குரியவராகவும் என் போன்ருேருக்கு உற்ற துணைவராகவும் விளங்கிய விருதுநகர் பெரியவர் வி.வி. இராமசாமி அவர்கள் இயற்கையெய்திய செய்தி கேட்டுப் பெருந்துன்பத்துக்காளானேன். தன்னுடைய குடும்பத்துப் பிள்ளையைப் போல் என்னிடம் பாசத்தைப் பொழிந்தவர் அவர்.

திராவிடர் இயக்கம் மற்றுமொரு பேரிழப்புக்கு உள்ளாகிவிட்டது. வி. வி. ஆர். குடும்பத்துக்கு எனதுஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மு. கருணாநிதி
தலைவர், தி. மு. க.

### பேராசிரியர்

தமிழர்களின் மொழிப் போராட்டங்களின் போது முன்னணியில் நின்று குன்ருது ஆதரவு தந்தவரும், விருதைப் பெரியார் என்று போற்றி அழைக்கப்பட்ட நமது அன்பிற்கும் மதிப்பிற்கும் உரியவருமானவிருதுநகர் வி. வி. இராமசாமி அவர்கள் தமது எண்பத்திரண்டாம் வயதில் இயற்கையெய்திஞர் என்னும் செய்தியைக் கேட்டு வருந்துகிறேன்.

தென்பாண்டி மண்டலத்தில் நீதிக் கட்சிக் காலம் முதலாகப் பட்டிவீரன்பட்டி சௌந்திரபாண்டியஞர் அவர்களுடன் இணைந்து நின்று அருந்தொண்டாற்றிய பெரியவர் வி. வி. ஆர். அவர்கள். தந்தை பெரியார் அவர்களுடைய சுயமரியாதை இயக்கம் வேரூன்றத் துணை நின்றதோடு தமது பிற்பட்ட சமுதாய மக்களைச் சுயமரியாதைகொள்ளச்செய்துபெருமளவு முன்னேறச் செய்த பெருமை அவருக்குண்டு

பேரறிஞர் அண்ணா அவர்களிடத்தில் பெருமதிப்புக் கொண்டு தி. மு. கழகத்திலும் ஈடுபட்டுப் பல ஆண்டுக்காலம் தொண்டாற்றியதோடு கழகச் சார்பில் மாநிலங்களவை உறுப்பினராகவும் அமர்ந்து நற்பணியாற்றியுள்ளார்.

பெரியாரின் தன்மான உணர்வும், அண்ணாவின் தமிழினப்பற்றும் தமது இரு கண்களாகக் கொண்டு வாழ்ந்தவர் அவர். 'தமிழ்த் தென்றல்' என்னும் அவரது ஏட்டின்மூலம் தமிழ் மறுமலர்ச்சிக்கும் - இந்திஆதிக்க எதிர்ப்புக்கும் உறுதுணையாக செயல்பட்டார்.

கழகத் தலைவர் கலைஞரிடமும், என்னிடமும் பேரன்பு கொண்டு கழகத்தினை வளர்ப்பதில் அவ்வப்போது தமது ஆய்வுரைகளை வழங்கி — எங்களுக்கு நம்பிக்கையூட்டி வந்த பெரியவராக விளங்கிஞர். அவரது இழப்பு — தி. மு. கழகத்திற்கு மட்டுமின்றித் தமிழ் நாட்டுக்கே பேரிழப்பாகும்.

அவரது அருமைத் துணைவியாருக்கும், மக்களுக்கும், குடும்பத்தாருக்கும் கழகத்தின் சார்பில் என்னுடைய ஆழ்ந்தஇரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

க. அன்பழகன்
பொதுச் செயலாளர்
தி. மு. க.

# அன்பில் நடத்தும் நிகழ்ச்சி சோடை போகாது!



அன்பில் தர்மலிங்கம் வரவேற்புக் குழுத் தலைவராக இருந்து அனைவரும் ''வாரீர்'' என்று அழைக்கிருர் என்ருல், அவர் நடத்துகிற எந்த ஒரு நிகழ்ச்சியும் சோடை போகாது; சொத்தையாகாது.

நான் அடிக்கடி அவரை கேலி பேசுவதுண்டு. அன்பில் தர்மலிங்கம் பெரியாருடைய தொண்டராஞலும், அண்ணாவின்தம்பியாஞலும் என்னுடைய தோழராஞலும் அவருடைய கொள்கைப்பிடிப்பை யாராலும் கடுகளவும் அசைக்க முடியாது என்பதை நாங்கள் உணர்ந்து இருந்தாலும்கூட திருச்சி மாவட்டத்தைப் பொறுத்த வரையில் அவர் ஒரு சர்வ கட்சிக்காரர். அப்படிப்பட்ட சர்வ கட்சிக்காரருக்கு நாமும் நம்மாலான சகாயத்தைச்செய்வோம்என்று இயற்கை இந்தத் திருக்கூத்தை, (மழையை) நடத்தி இருக்கிறது என்று நான் கருதுகிறன்.

[திருச்சி இந்தி எதிர்ப்பு மாநாட்டில் கலைஞர்]

## 'நம் நாடு' வாசகர்களுக்கு

'நம்நாடு' பொங்கல் மலர் 12-1-79 அன்றே வெளிவந்து விடுமாகையால் 7-1-79-ல் வரவேண்டிய நம்நாடு இதழ் வெளிவராது என்பதைத் தெரிவித்துக் கொள்கிருேம்.

# அறை எண்: 17

**பழனி சித்தார்த்தன்**



**அன்று:**

இந்தியா முழுக்க சி ஐ டி. களும், போலீஸ்காரர்களும் வேட்டை நாய்களாகச் சுற்றி அலைந்துதலைமறைவாகஇருந்த ஜார்ஜ் பெர்னாண்டசைக் கைது செய்தார்கள். தனி ஒரு மனிதனைப் பிடிப்பதற்காக— அதுவும் அரசியலில் மாறுபட்ட கருத்தினைக் கொண்டிருந்ததற்காகவும்,இந்தியாவை இருளில் ஆழ்த்திய நெருக்கடி நிலையை எதிர்த்ததற்காகவும் —வரலாறு காணாத வகையில் அரசு எந்திரம் முடுக்கிவிடப் பட்டது.

அப்படிக் கைதான ஜார்ஜ் பெர்னாண்டஸ் எதிர்வழக்காட முடியாத நிலையில் —

அவர் கரங்களில் கனத்த விலங்குகள் பூட்டப்பட்டன; அவருடைய கால்கள் இரும்புச் சங்கிலிகளால் பிணைக்கப் பட்டன;

ஒரு மனிதனாக அல்லாமல் —வேட்டையாடப்பட்ட ஒரு மிருகம்போலவே — திகார் சிறைச்சாலையின் பதினேழாம் எண் அறையில் அவர் அடைக்கப்பட்டார்.

அடைக்கப்பட்டபின்னும்- அவருக்கிழைக்கப்பட்ட கொடுமைகளுக்கு ஒரு முற்றுப் புள்ளி வைக்கப்படவில்லை.

இரவு முழுக்க அவரைத் தூங்கவிடாது சிறை அறையின் வெளிப்புறமிருந்து— அவர் கண்களைக் கூசச் செய்யும்படியாகப் பெரிய மின் விளக்கின் மூலம் ஒளிவெள்ளம் பாய்ச்சப்பட்டது. குளிர் மிகுந்த இரவுகளில் போலீஸ் அதிகாரிகள் அவர் கண் முன்னால் சூடான தேநீர் அருந்துவார்கள் விஸ்கி, பிராந்தி அருந்துவார்கள்; அப்போது கேலியும் கிண்டலுமாகப் பெர்னாண்டசைப் பார்த்து "ஒரு கப் தேநீர் அருந்துகிறீர்களா... ஒரு பெக்' பிராந்தியைச் சுவை பார்க்கிறீர்களா?..." என்றெல்லாம் கேட்பார்கள்.

வெளி உலகில் என்ன நடந்து கொண்டிருக்கிறது என்றே அவருக்குத்தெரியாது. எந்த ஒரு பத்திரிகையும் அவர் பார்வையில்பட அனுமதிக்கப் படாது.

மிக இழிவான — மிகக் கொடுமையான — மிக அவமானகரமான இந்த நிலை, இந்திராவின் வீழ்ச்சிச் செய்தி வெளியாவதற்கு முன்னிருந்த கடைசி நிமிடம் வரை பெர்னாண்டசுக்கு நீடித்தது.

இந்தியாவைச்சூழ்ந்திருந்த இருள் அகன்றபோதுதான் பெர்னாண்டசின் வாழ்விலும் புத்தொளி வீசத் துவங்கியது

**இன்று:**

நாடாளுமன்ற உரிமை மீறல் என்பது ஒரு குற்றம்.

[இந்திராமீது குற்றமிருப்பது கண்டுபிடிக்கப்பட்டு, தண்டனை வழங்கப்பட இருந்த நேரத்தில், நமது கழகத் தலைவர் கலைஞர் அவர்கள்கூட. இந்திராவுக்குத் தண்டனை அளிக்கும் முடிவை மறுபரிசிலனை செய்ய வேண்டும் என்று பெருந்தன்மையுடன் மத்திய அரசுக்கு வேண்டுகோள் விடுத்தார்.]

இந்தக் குற்றத்தை இந்திரா— 'மாஜி' தலைமையமைச்சர் — செய்தார் என்பது நீண்ட விசாரணைக்குப் பிறகு ஐயத்திற்கிடமின்றி - மெய்ப்பிக்கப் பட்டது.

குற்றமிழைத்தவர் தண்டிக்கப்படவேண்டும் என்பது எல்லோராலும் ஒப்புக்கொள்ளப் பட்ட ஒரு விதி; சட்ட நியதி!

ஆகவே —

உரிமை மீறல் குற்றம் புரிந்தமைக்காக இந்திரா தண்டிக்கப்பட்டார். தண்டனை. நாடாளுமன்றக் கூட்டத் தொடர் முடியும்வரை 'அவரைச் சிறையில் அடைப்பதுதான்.

கைது செய்யப்படும்போது அதிகபட்சம் எவ்வளவு 'முரண்டு' செய்யமுடியுமோ அவ்வளவு செய்திருக்கிறார் இந்திரா — 'நெருக்கடி நிலை' என்ற ஒரு 'மோசமான முன்மாதிரி'யை அறிமுகப்படுத்தியது போலவே இப்போதும் நடந்திருக்கிறார். மோசமான முன்மாதிரியைப் பின்பற்றுவதில் அவருக்குள்ள ஆர்வம் அளவிடற்கரியது போலும்!

தன்னுடைய ஆதரவாளர்கள் திரண்டிருக்கும் வாயில் வழியாகவே தன்னைக் கைது செய்து அழைத்துச் செல்ல வேண்டுமெனசிறுபிள்ளைத்தனமாகப் பிடிவாதம் செய்திருக்கிறார். அந்த வாயில் வழியாக வருவதாக அவர் அவர்களுக்கு வாக்குறுதி அளித்தாராம்...! வாக்குறுதிகளைக் காப்பாற்றுவதில் இந்திராவுக்குத்தான் எத்தனை எத்தனை அக்கறை...!

இந்திராவின் கேலிக்கூத்தான நாடகங்களெல்லாம் ஓய்ந்த பிறகு-அவர் சிறையில் அடைக்கப்படுகிறார். பெர்னாண்டஸ் அடைக்கப் பட்ட அதே திகார் சிறையில்! அதே பதினேழாம் எண் அறையில்!

ஆனால் —அவர் ஒரு மனிதப் பிறவிக்குரிய எல்லாவித மரியாதையோடும் மதிப்போடும் நடத்தப்படுகிறார்.

அவர் அடைக்கப்பட்டிருந்த அந்த அறையில் இப்போது அனைத்து வசதிகளும் உள்ளன! விரும்பிய பத்திரிகைகள் படிக்கலாம்; வேண்டிய புத்தகங்கள் படிக்கலாம்; வீட்டிலிருந்து மகனோ மருமகளோ விருந்து உணவு கொண்டு வரலாம்தொலைக்காட்சியை(டெலிவிஷன்] கண்டு மகிழலாம்... இந்திராவின் 'உலகம்' ஒன்றும் சிறையில் இருந்தபோது இருண்டு விடவில்லை - பெர்னாண்டசின் உலகத்தைப் போல்!

அல்லது — சிறையிலிருந்தபோது ஜெயப்பிரகாஷ் நாராயணனில் 'உலகம்' அவரைச் சுற்றி சுக்குநூறாக உடைந்து சிதறியதுபோல்— இந்திராவின் 'உலகம்' தூள் தூளாகி விடவில்லை.

இந்திரா சிறையிலிருந்த காலம் ஒன்றும் மிக நீண்டதல்ல; எட்டே நாட்கள்தான் ஆம், வெறும் எட்டே எட்டு நாட்கள்தான்!

சிறையேகிய இந்திராவுக்குத் தாம் விடுதலையாகும்நாள் எதுவென்று தெளிவாகத் தெரியும்.

ஆனால் —

பெர்னாண்டசுக்கோ —

தாம் எப்போது விடுதலை செய்யப்படுவோம் என்பதும் தெரியாது! அப்படியே விடுதலை ஆனாலும் தமது உடலில் உயிர்தங்கியிருக்குமா என்பதும் தெரியாது.

'சிறை' — 'தண்டனை' — என்ற சொற்கள் சாதாரண ஒரு இந்தியக் குடிமகனுக்கு அச்சத்தை மூட்டலாம்; ஆனால் இந்திரா அடைக்கப்பட்டது போன்ற 'சிறை'யும் அனுபவித்ததுபோன்ற தண்டனையும் கிடைப்பதாக இருந்தால்— எந்த ஒரு இந்தியக் குடிமகனும் அந்தச் 'சிறை'யிலிருந்து மீளவும் அந்தத் 'தண்டனையிலிருந்து தப்பவும் என்றுமே -ரும்ப மாட்டான்...

சிறையிலிருந்து வெளிவந்த இந்திராவிடம் நிருபர்கள் கேட்டது;

'உங்கள் சிறை அனுபவம் எப்படி இருந்தது ?''

இந்திராவின் பதில்;

''வீட்டில் எப்படி இருந்தேனோ அப்படித்தான் சிறையில் இருந்தேன்...'

—இப்போது மீண்டும் கடந்த காலத்தைச் சற்றுத் திரும்பிப் பார்ப்போமா?

வேதனை மிகுந்த சிறைவாசத்திலிருந்து மீண்டு வரும் பெர்னாண்டசைப் பார்த்து நிருபர்கள் கேட்கிறார்கள்:

'உங்கள் சிறை அனுபவம் எப்படி இருந்தது? சிறையில் உங்களை அடித்தார்களா ?'

பெர்னாண்ட பதில் கூறவில்லை.

தன்னுடைய சட்டையைக் கழற்றிக் காண்பிக்கிறார், தழும்புகள்...உடம்பு முழுக்கத் தழும்புகள்...அடிபட்ட தழும்புகள்

குற்றம் புரிந்ததாக மெய்ப்பிக்கப்பட்ட-எதிர் வழக்காடவும். குறுக்கு விசாரணை செய்யவும் அனுமதிக்கப்பட்ட... இந்திராவைச் சிறையில் அடைத்ததைத் தொடர்ந்து—

அவருடைய அனுதாபிகளும் கைக்கூலிகளும்இந்தியா முழுக்கத் திட்டமிட்ட வன்முறைகளை நடத்தினார்கள் எவ்வளவோ பொருட் சேதங்கள்...எவ்வளவோ உயிர்ச் சேதங்கள்.

ஆனல்...

இருண்டகாலத்தின்போது



ஒரு பாவமும் அறியாத-ஒரு குற்றமும் புரியாத எத்தனையோ நிரபராதிகளான ஆண், பெண்கள் சிறையில் அடைக்கப்பட்டபோது — சித்திரவதைகளுக்கு ஆளானபோது — வேதனையின் விளிம்பிறகே சென்று உயிர் இழந்தபோது —

இப்போது எகிறி எகிறிக் குதிப்பவர்கள் எல்லாம்எங்கே இருந்தார்கள்? என்ன செய்து கொண்டிருந்தார்கள்?

இந்திராவின் எட்டு நாள் சிறைவாசத்திற்காகத் தாண்டிக் குதிக்கும் தமிழ் நாட்டு இந்திரா அனுதாபிகளே அவர்தம் கைக்கூலிகளே —

சிட்டிபாபுவும். சாத்தூர் பாலகிருட்டிணனும் சிறைச்சாலையின் சித்திரவதைகள் தாளாது மாண்டு போனார்களே —

அப்போது உங்கள் கண்களிலிருந்து ஒரு சொட்டுக் கண்ணீர் கூட வரவில்லையே...

ஏன்?

—வாயிருந்தும் ஊமைகளாக

—கண்ணிருந்தும் குருடராக

—உணர்விருந்தும் மரங்களாக

நின்றீர்களே...ஏன்?

நினைவிருக்கட்டும்!

சரித்திரம் திரும்பத்திரும்ப நிகழ்கிறது...வாளை எடுத்தவன் வாளாலேயே சாகிறான்!


தமிழர் திருநாளில் வெளிவருகிறது!

நாடெங்கும் கண்ணியம் நிலைக்க!

கடமை தொடர. கட்டுபபாடு வளர!

திங்களிருமுறை வெளிவருகிறது!

## கண்ணியம்

சிறப்பாசிரியர்: இரா. வெற்றிகொண்டான்

ஆசிரியர்: ஆ. கோ. குலோத்துங்கன்

தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களின் கருத்துகளுக்கு உரம் ஊட்ட— சரங்களுக்கு வலுவூட்ட!

குறிப்பு: உங்கள் கேள்விகளுக்கு வெற்றிகொண்டான் பதிலளிக்கிறார்.

விவரங்களுக்கு: மேலாளர், கண்ணியம், 2 இரண்டாவது சர்க்கிள் சாலை, சவகர் நகர், சென்னை - 600082






பிரதிநிதி;

க எம். ஜி. மாதவன்,

11.புதுத்தெரு, மைலாப்பூர்

சென்னை-4



தொலைபேசிஎண் கடை: 33213 இல்லம் 31922

நாம்நாடுவோர்தவறாமல் நாடுவது

தமிழக எண்ணெய்ப் பலகாரம்

தயாரிப்பு-விற்பனை நிலையம்

92.திருப்பரங்குன்றம் சாலை மதுரை

தனிச்சிறப்பு: சிலேபி.தெக்கத்திமிட்டாய், அதிரசம், இனிப்புசேவு,பக்கவடா, மிக்சர், முருக்கு.கடலை நவதானியம் மற்றும் இனிப்புகாரவகைகள்



உரிமையாளர்

பே.தேவசகாயம்

கிளைகள்: 261.மேலமாசி வீதி, 70.சுவாமிசன்னதி 12.அழகர்கோவில் சாலை,72 டவுன்ஹால்ரோடு, மதுரை.

★ தமிழர்கள் இரண்டாந்தரக் குடிமக்களல்லர்!

★ அனைத்து மாநில மொழிகளையும் ஆட்சி மொழிகளாக்குக!

★ அதுகாறும் ஆங்கிலம் மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும்!

★ மறைமுக இந்தித் திணிப்பை உடனடியாகக் கைவிடுக!

★ அரசியல் சட்டத்தை திருத்தி மொழியுரிமை வழங்குக!

## இறுதி வெற்றி பெறும் வரை

# இந்தி எதிர்ப்புக் கனல் அணையாமல் பாதுகாத்து வளர்த்திட உறுதி ஏற்போம்!

டிசம்பர் 23. 24 தேதிகளில் திருச்சியில் நடைபெற்ற இந்தி எதிர்ப்பு மாநில மாநாட்டில் கழகப் பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்கள் முன் மொழிய, கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் வழி மொழிந்து பலத்த கரவொலிக்கிடையே நிறைவேற்றப்பட்ட தீர்மானம் வருமாறு.—

பல்வேறு இன வழியும் வெவ்வேறுமொழி கலை நாகரிகப் பண்பாடும் கொண்ட பல கோடி மக்கள் வாழும் ஒரு துணைக் கண்டம் என்னும் இந்தியா விடுதலை பெற்றதைத் தொடர்ந்து உருவாக்கப்பட்ட அரசியல் நிர்ணய சபையில் காங்கிரஸ் கட்சியின் மூலம் உறுப்பினர்கள் தேர்வுசெய்யப்பட்டதால், வடவர் ஆதிக்கம் மேலோங்கி இருந்த நிலையிலும் தேசியத்தால் ஏற்படுத்தப்பட்ட வெறி தெளியாத நிலையிலும் ஒரு வட்டாரத்தில் மட்டுமே பேசப்படும் வளர்ச்சி பெருத இந்தி மொழியே இந்தியாவின் ஆட்சி மொழிஎன்று பின் விளைவுகளை ஆழ்ந்து பாராமலே தீர்மானிக்கப்பட்டு விட்டது.

வட மாநிலங்கள் சிலவற்றில் பத்துக்கு மேற்பட்ட பல்வேறுபட்ட வடிவங்களில் தனித் தனி மொழியாகப் பேசப்பட்டு வந்த மொழிகளையெல்லாம் அவை வளராத நிலையில் ஒரே மொழி எனக் கொண்டு அதன்மூலம் அது மற்ற மொழிகளைவிட பெரிய வட்டார மொழி என்பதால் அதுவே பொதுமொழியாவதற்குஉரியதுஎன்னும் தவருன நோக்கில்ஆட்சி மொழி என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

### அந்தி: அக்கிரமம்

இத்தீர்மானமும் காங்கிரஸ் கட்சி கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டு அரசியல் நிர்ணய சபையில் வந்த காலத்து கட்சிக் கட்டுப்பாடு காரணமாக எதிர்ப்புக்கு இடம் அளிக்காது நிறைவேற்றப்பட்டது. தேவநாகரி எழுத்தில் எழுதப்படும் இந்தியே யூனியன் ஆட்சி மொழி என்றும் உலக நாடுகளில் எல்லாம் வழங்கும் இந்திய எண் வரி வடிவத்திற்குப் பதில் இந்தி எண்களையும் வழங்கலாம் என்றும் ஆட்சி மொழிப் பிரிவில் விதி செய்தனர். அவர் தம் நோக்கில் இந்திய எண்களேயாயினும் அவற்றிலும் இந்தி எண் பெற்ற உயர்வும் இந்தியாவையே இந்திக்கும் அதன் வரி வடிவத்திற்கும் மட்டுமே உரிய நாடாகக் கருதி தமது அடிமைக் காடாகவே இந்தியாவை எண்ணி இருந்தனர் என்பது தெளிவாகும்.

பிற மொழிகளைப் பேசும் நாட்டில் மிகப் பெரும்பான்மையான மக்களின் உரிமைகளைக் கருதாமலும், வளர்ச்சி பெற்ற தகுதி வாய்ந்த அவர்தம் தாய் மொழிகளை எல்லாம் மதிக்காமலும் சிறுபான்மையினரான இந்திக்காரர்கள் தாய்மொழி என்னும் ஒரே தகுதியால் நிர்வாகத்தை நடத்த இயலாத—ஆட்சி மொழியாகப் பயன்படுத்தக் கூட முடியாத நிலையில் இருந்தஇந்தியை; அனைத்துமொழியினரையும் இணைக்கும் யூனியன்ஆட்சிமொழியாக ஆக்கியதை விட அநீதி வேறு இருக்க முடியாது.

இந்தியை ஆட்சி மொழியாக உயர்த்தும் இந்த அரசமைப்புச்சட்டம் இயற்றப்பட்டதே ஆங்கிலத்தில்தான் என்பதும், அரசியல் நிர்ணய சபை உறுப்பினர்கள் கையொப்பமிட்டதும் ஆங்கிலத்தில் வரையப்பட்ட படிவத்தில் தான் என்பதும். அந்தச்சபையே இந்திக்கு அதற்கு ஏற்ற தகுதி இருப்பதாகக் கருதவில்லை என்பதையும், ஏதோ ஒரு சூழ்நிலையின் கைதிகளாகவே செயல்பட்டு இந்தியை ஆட்சி மொழியாக்கத்தீர்மானித்துள்ளனர் என்பதையும் புலப்படுத்தும்,

### இரண்டாந்தரக் குடிமக்கள்!

ஒரு வட்டாரத்தைச் சேர்ந்த ஒரே இன மக்களின் இந்தி மொழி, ஆட்சிமொழியாவதன் மூலம் மற்ற மொழியினரை இரண்டாந்தரக் குடிமக்களாக்கி ஆதிக்கம் செலுத்தும் முறைகேடு தடுக்கப்படவும் இந்திய மக்கள் அனைவரும் சுதந்திரம் சமத்துவம் சகோதரத்துவம் உடையவர்கள் என்பதை நிலைநாட்டும் ஒத்த குடியுரிமையுடனும் ஒற்றுமையுடனும் வாழவும் எட்டாவது அட்டவணையில் இடம் பெற்ற தேசிய மொழிகள் யாவும் யூனியன் ஆட்சி மொழிகளாக ஏற்கப்பட்டாக வேணடும். மாநில ஆட்சி மொழிகளாக உள்ள தேசிய மொழிகள் யாவும் மத்திய ஆட்சி மொழியாக நடைமுறைப்படுத்தும் காலம் வரையில் எந்த ஒரு மொழியினரின் ஆதிக்கத்திற்கும் வழிகோலாது சமத்துவம் நிலவ; முன்னர் நடைமுறையில் இருந்தவாறே ஆங்கிலம் ஒன்று மட்டுமே ஆட்சி மொழியாக நிலவவேண்டும்;

---

டிசம்பர் 23, 24 ஆகிய நாட்களில் திருச்சியில் நடைபெற்ற இந்தி எதிர்ப்பு மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்.

---

### திணிப்பைக் கைவிடுக!

அரசமைப்புச் சட்டத்தின் பேரால் நிர்வாகத்தின் பல துறைகளிலும் இந்தியை புகுத்துவதையும் ஆங்கிலத்தை ஒதுக்குவதையும் பிற மொழி மக்களிடையே இந்தியை நுழைப்பதையும் மத்திய அரசு கைவிட வேண்டும்

'இந்தி' மட்டுமே தேசிய மொழி அல்ல, மாநில ஆட்சி மொழிகளான அனைத்தும் தேசிய மொழிகளே.

'இந்தி' இந்தியாவில் வழங்கும் பல நூறு மொழிகளிடையே எந்த வகையாலும் பொது மொழியாகாது. பல குடும்பங்களுள் ஒன்ருன இந்தோ — ஆரிய குடும்பமொழிகளுள்ளும் பலவகையில் பேசப்படும் இந்தி வட்டார மொழிகளிலேதான் இந்தி பொது மொழியாகும்,

'இந்தி' இந்தியாவெங்கும் பரவலாக ஒரு சிறுபான்மையினரால்கூடப் பேசப்படாததால் இந்திய மக்களை அது இணைப்பதாகாது. இன்று இணைப்பு மொழியாக சிறந்து விளங்குவதும் ஆங்கிலமே.

'இந்தி' உலகத் தொடர்புக்கோ வெளிநாட்டு வாணிகத்துக்கோ விஞ்ஞான அறிவைப் பெறுவதற்கோ, ஆங்கிலத்தைப் போல் பயன்பட முடியாது என்பதுடன் பிற மொழியினருக்கு இந்தி பயனற்ற வெறும் சுமையேயாகும்,

'இந்தி' யூனியன் அரசு நிர்வாகத்தை நடத்துவதற்கு வேண்டிய திட்ப நுட்பமுடைய பொருள் தரும் மொழியும் அல்ல. சட்ட நுட்பத்தை குழப்பத்திற்கு இடம்இன்றி வழங்கவோ நீதிமன்றங்களில் ஐயமின்றி வழங்கவோ பயன்படுத்தவோ ஏற்ற மொழியல்ல.

வளர்ந்த...தனித் தன்மை வாய்ந்த பல மொழி மக்களையும் இரண்டாந்தரக் குடிமக்கள் ஆக்கி தாழ்த்துவதுடன் இந்திக்காரர்களை ஆதிக்கக் குடிமக்கள் ஆக்குவதால் பிற மொழி மக்களிடம் குமுறலையும் கொந்தளிப்பையும் உருவாக்கி நாட்டின் ஒற்றுமையையே குலைக்கும்.

'இந்தி' ஆட்சிமொழியாவதனுல் நாடு பெற வேண்டிய முன்னேற்றம் தடைபடும். முற்போக்குச் சிந்தனையும் குன்றும். இன்னேரன்ன காரணங்கள் பலவற்றை சான்றுடன் எடுத்துக் காட்டி அரசியல் தலைவர்களும் பெரு மக்களும் இந்தி ஆட்சி மொழியாவது நியாயமல்ல என்று தொடர்ந்து எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

### 19்8 ம் ஆண்டு முதலே எதிர்ப்பு

தேசிய உணர்வு அடிப்படையில் சென்னை மாநிலத்தில் மூதறிஞர் ராஜாஜி அவர்கள் பள்ளிகளில் இந்தியைப் புகுத்திய 1938 ஆம் ஆண்டு முதலாகவே திராவிடத்து விடிவெள்ளி தந்தை பெரியார் அவர்களும், தென்னாட்டு காந்தி பேரறிஞர் அண்ணா அவர்களும் தமிழ் மொழி வல்லுனர்களும்பேராசிரியப்பெருமக்களும் இந்தி மொழியால் தமிழுக்கு இழுக்கு தமிழர்க்கு கேடு தென்னாட்டுக்குத்தீங்கு மாணவர்க்கு வீண் சுமை, பிற்பட்ட இனத்தவரின் முன்னேற்றத்திற்குத்தடை என்றவிளக்கங்கள் பல தந்து இந்தி எதிர்ப்புப் போராட்டங்கள் பல நடத்தி பல்லாயிரக் கணக்கானவர் சிறை புகுந்து விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தினர்.

தொடர்ந்து திராவிடர் கழகமும். திராவிட முன்னேற்றக் கழகமும் மேற்கொண்ட பல அறப்போர்களின் பயனுகப் பிறமொழி பேசும் மக்கள் எதிர்ப்பும் வளரலாயிற்று.

### நேருவின் உறுதிமொழி

எதிர்ப்பு உணர்ச்சியை ஒருவாறு அமைதிப்படுத்த மக்கள் விரும்பும் காலம் என்ற ஆங்கிலம் மாற்று ஆட்சிமொழியாக இருக்கும் இது தொடர்பான முடிவை இந்தி பேசும் மக்களுக்கு விடமாட்டேன். இந்தி பேசாத மக்களுக்கே விடுவேன்'' என்று பிரதமர் நேரு அவர்கள் 7–8–59 ல் ஒரு உறுதி மொழி கூறினர்.

பின்னர் 1962 ல் சீன ஆக்கிரமிப்பு நிகழ்ந்த போதும் நேரு மறுபடியும் 'ஆங்கிலம் ஆட்சி மொழியாக நீடிக்கும்; அதை

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

# தமிழகச் சட்டப் பேரவையில் இந்தி எதிர்ப்பு தீர்மானம் நிறைவேற்றப்படுமா?

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தி பேசாத மக்கள் அகற்ற இசைகிற வரையில் நான் அகற்றமாட்டேன்'' என்று உறுதிமொழி வழங்கினர்.

முன்னர் வழங்கிய உறுதி மொழியே பிறமொழி பேசுகிற மக்களுக்கு ஏதோ பெரிய உரிமை வழங்குவதாக தோற்றம் அளிப்பதே அன்றி அது இந்தியுடன் ஆங்கிலமும் பயன்படுத்த இடம் அளிப்பதுதான்.

பின்னர் வழங்கிய உறுதி மொழியிலோ இந்தி ஆட்சி மொழியாக உள்ள நிலையில் ஆங்கிலத்திற்குத் துணைமொழி நிலையை உரிய வைத்து பயன்படுத்திக் கொள்ளும் உரிமை பறிக்கப்படமாட்டாது என்றுதான் அறிவிக்க பட்டது.

பிற மொழி பேசுகிற மக்களின் உணர்ச்சிக்கு உரிய ம ப்பு அளிக்காமலே அவர்களை சமாதானம் செய்யும் வகையில் இந்தி மொழியின் தகுதிக் குறைவால் அனைத்து நிர்வாகத்தையும் அதைக்கொண்டு நடத்த இடலாத நிலையில், இந்தி வளர்க்கப்படும்வரை ஆங்கிலத்தைப் பயன்படுத்திக்கொள்ளவே அந்த உறு மொழிகள் பயன்பட்டனவே அன்றி இந்தியை ஆட்சி மொழியாகப் புகுத்தும் முயற்சி சிறிதும் குன்றவில்லை.

## ஆட்சிமொழி மசோதா!

ஆட்சி மொழி மசோதா கொண்டு வரப்பட்ட போதும் அது பிற மொழியாளர்களுக்குப் பாதுகாப்பாக செய்யப்பட்டது போன்று ஏமாற்றவே பயன்பட்டது

1965—க்குப் பின்னும் ஆங்கிலமும் துணை ஆட்சி மொழியாகப் பயன்படுத்தப்படலாம் என்றுதான் அம்மசோதா விதி செய்தது, ஆங்கிலத்தைப் பயன்படுத்துவது கட்டாயமுமல்ல அதை நீடித்துக்கொள்ளும் உரிமை நேரு கூறியது போன்று இந்தி பேசாத மக்களுக்கு உண்டு என்ற வகையிலும் எந்தக் கருத்தும் டம்பெறவில்லை

தலைவர் நேருவின் உறுதிமொழியே கூட ஆட்சி மொழிச் சட்டத்தில் இடம் பெறாத நிலையில் தனது உறுதிமொழி தனது தனிப்பட்ட கருத்து எனவும் அதை ஏற்குமாறு நாடாளு மன்றத்தைக் கட்டுப்படுத்த முடியாது எனவும் நேரு அவர்களே கூறியது பிறமொழி மக்களுக்குப் பெரியதொரு ஏமாற்றத்தையே ஏற்படுத்தியது

நேருவின் உறுதிமொழி உரைத்தவராலேயே கைவிடப்பட்டதாகி அது எந்நாளும் நிறைவேற்றப்படமாட்டாது ன்பதை நாளும் உணர்த்தும் வகையிலேயே மத்திய அரசின் நடைமுறை அமைந்துள்ளது.

இவ்வாறு வஞ்சிக்கப்பட்ட நாட்டு மக்களின் கொதிப்பு உணர்ச்சியைக் காட்டும் வடிவமாகத்தான் ஆட்சி மொழிப் பிரிவு சட்ட எரிப்புப் போராட்டத்தையும் மறியல் போராட்டத்தையும் 1964—ல் தி. மு கழகம் பேரறிஞர் அண்ணாவின் தலைமையில் மேற்கொண்டது

அறப்போராட்டம் நாளும் தொடர்ந்தது. மக்கள் உணர்ச்சி கொந்தளித்தது.

கழகக் கண்மணியினர் செந்தமிழ் காத்திடச் செலுத்தும் காணிக்கைஎனதமது இன்னுயிரையே வெந்தழலுக்கு இரையாக்கிக் கொண்டனர்.

அரசாங்கத்தின் அடக்குமுறை பலரது உயிரைக் குடித்தது.

மாணவர்கள் கட்சி வேறுபாடு இன்றி போராட்டத்தில் குதித்தனர்.

தமிழ்நாடே தணலாயிற்று.

பிற மாநிலங்களுக்கு இந்தி எதிர்ப்புத் தீ பரவியது.

மத்திய அரசே திகைத்தது

அதன் விளைவாக மத்திய அரசின் சார்பில் பிரதமரும், குடியரசுத் தலைவரும் ஆங்கிலத்தை அகற்றமாட்டோம்' என்று திரும்பத் திரும்பக் கூறிவந்தனரே அன்றி, இந்தியை நிர்வாகத்தில் நுழைப்பதையோ பரப்புவதையோ விட்டுவிடாததுடன் இந்தியின் தேவை பிறமொழி மக்களுக்குத் தவிர்க்க முடியாததாக ஆகுமாறு திட்டமிட்டுச் செய்து வந்தனர்,

நயமாகப்பேசி உறுதிமொழியால் எதிர்ப்பைச் சமாளித்து தமது ஆதிக்க அம்சத்தினை நிலைநிறுத்திக் கொள்ளும் நரித்தனமே ராஜதந்திரம் எனக்கொண்டு செயல்பட்டனர்,

## மறைமுகத் திணிப்பு

அதன் தொடர்ச்சியாகப் பிரதமர் மொரார்ஜி அவர்கள் "நிலைமைகள் அப்படியே ஒரே நிலையில் இருக்க முடியாது. மத்திய அரசில் இந்தியை ஆட்சி மொழியாகப் பயன்படுத்துவதும் அதிகரிக்கத்தான் செய்யும்'' என்று அண்மைக் காலத்தில் தெரிவித்து இருப்பதும் மேலும் அதிகாரிகள் இந்தி படிப்பது அவர்களுக்குத்தான் நல்லது என்று கூறியிருப்பதும் இந்தியை மறைமுகமாகத் திணிப்பதே அரசின் இலட்சியம் என்பதைப் புலப்படுத்துகிறது.

மத்திய அரசு அலுவலகங்கள்,அரசுடமை ஆக்கப்பட்ட வங்கிகள், பொதுத்துறை நிறுவனங்கள், ஆயுள் காப்பீட்டுக் கழகம் முதலானவற்றில் இந்தியைத் திணிப்பது தீவிரப்படுத்தப்பட்டு இருப்பதும். நிதித்துறையில் ஒரு பிரிவு முழுவதும் இந்தியிலே நிருவகிக்கப்படுவதாக இந்த ண்டு அறிக்கை கூறுவதும், சில ஆண்டுகளாகவே பல துறைகளில்கோப்புகளில் இந்தியில் குறிப்பு எழுதுவது பெருகி வருவதாக அறியப்படும் செய்தியும் மத்திய அரசு ஆங்கிலத்தையே மெல்ல ஒதுக்கி ஒழித்திட வழி செய்வதைத் தெளிவாக்கிவிட்டது.

இந்தி அறியாத அரசு அலுவலர்களுக்கு கட்டாயமாக இந்தியைக்கற்பிப்பதற்காக ஒரு பெரும் குழுவினராக தனி அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் என்பது "இந்தி ஆதிக்கம்'' உருவாகிவிட்டது என்பதையே காட்டுகிறது

மேலும் பொதுமக்கள் வரிப் பணத்தில் பெரும் நிதி செலவிட்டு ஐக்கிய நாடுகள் மன்றத்தில் இந்திக்குப் பெருமை சேர்ப்பதற்காக என்றே இந்திய வெளிவிவகார அமைச்சர் திரு. வாஜ்பாயி அவர்கள் இந்தியில்பேசியதும் இந்தியா என்றாலே 'இந்தி நாடுதான்'என்னும் தவறான எண்ணத்தையே உருவாக்கி இருக்கிறது

இவ்வாறு தமிழ் முதலான மாநிலமொழிகள் அந்தந்த மாநில மக்களின் மூச்சுக்காற்றாக இருப்பதை உணராமல் பலகோடி மக்களின் உரிமையைப் புறக்கணித்து இந்தியையே அனைத்திற்கும் கையாள்வதன் மூலம் அவர்களை இழிவுபடுத்தும் வகையில் மத்திய அரசு செயல்படுகிறது.

எனவேதான் தமிழ் மக்கள் உரிமையும் இந்தியல்லாத பிறமொழி இந்தி உரிமையும் ஆதிக்கத்திற்கு உட்படுத்தப்பட்டு நாளுக்கு நாள்பாதிக்கப்பட்டு வருவதை உணரும் தி.மு. கழகம் இனியும் இந்த நிலையைச் சகித்துக் கொள்ள முடியாது என்று கருதுகிறது,

## சட்டத்தைத் திருத்துக!

மாநில ஆட்சி மொழிகள் அனைத்தும் யூனியன் ஆட்சி மொழிகளாக ஏற்படும் வண்ணம் அரசமைப்புச் சட்டத்தின் ஆட்சி மொழிப் பிரிவுகள் உடனடியாகத் திருத்தப்பட வேண்டும் என்று வற்புறுத்துகிறது

அவ்வாறு அனைத்து மாநில ஆட்சி மொழிகளும் மத்திய ஆட்சி மொழிகளாவதற்கு வழிகோலும் வகையில் மேற்கொள்ளும் முதல் நடவடிக்கையாக இந்தோ – ஆரிய குடும்ப மொழிகளில் ஒன்றான இந்தியை ஆட்சி மொழியாக்கி உள்ள அரசு அந்தக் குடும்பத்தினின்றும்முற்றிலும் மாறுபட்ட திராவிடக் குடும்ப மொழிகளில் மூத்த மொழியான ஆட்சித்திறன்மிக்க தமிழை உடனடியாக ஏற்றுக்கொண்டு அனைவருக்கும் இணைப்பு மொழியாக பயன்படும் ஆங்கிலத்தையும் ஏற்று, தமிழ், இந்தி, ஆங்கிலம் மூன்றும் யூனியன் ஆட்சி மொழிகள் என்று அரசமைப்புச் சட்டத்தைத்திருத்தமுன்வரவேண்டும்.

முதல் நடவடிக்கை தேவையில்லை என்றால், அனைத்து மாநில ஆட்சி மொழிகளையும் மத்திய ஆட்சி மொழிகளாகச் சேர்த்து அரசமைப்புச் சட்டத்தில் இடம் பெறச் செய்ய வேண்டும்,

இதை நடைமுறைப்படுத்தும் நாள்வரை இந்தியை மட்டும் வளர்ப்பதையும், மறைமுகமாகத்திணிப்பதையும் கைவிட்டு ஆங்கிலத்தை மட்டுமே ஆட்சி மொழியாகப் பயன்படுத்த வேண்டும்.

மத்திய அரசு பிற மொழியாளர்களுக்கு இழைக்கும் அநீதியைத் திருத்த அந்தந்த மாநிலங்களில் இயங்கும் அஞ்சல்துறை, வானொலி தொலைக்காட்சி நிலையங்கள், ரயில்வே இலாகா நாட்டுடமையான வங்கிகள் ஆயுள் காப்பீட்டுக் கழகம், மத்திய அரசு தொடர்புடைய நிறுவனங்கள் மத்திய அரசு அலுவலகங்கள் ஆகியவற்றில் மக்கள் பயன்படுத்தும் குறிப்புகளிலும் அறிவிப்புகளிலும் இந்தியை கைவிட்டு ஆங்கிலத்துடன் அந்தந்த மாநில மொழிகளையே பயன்படுத்த வேண்டும்.

அஞ்சலட்டை, பதிவு அஞ்சல், பணவிடைத் தாள் பற்றுச் சீட்டு, வங்கிகள் பயன்படுத்தும் படிவங்கள் வருமான வரித்துறை படிவங்கள், ரயில்வே படிவங்கள் முதலான அனைத்திலும் இந்தி இடம்பெறச் செய்வதை கைவிட்டு ஆங்கிலத்துடன் மாநில ஆட்சி மொழி மட்டுமே இடம் பெறச் செய்ய வேண்டும்.

இவ்வாறு உடனடியாகச் செய்ய முற்படாவிட்டால் தொடர்ந்து அளிக்கப்பட்டு வரும் வாக்குறுதியையே ஒரு ஏமாற்று வழியாக மத்திய அரசு பயன்படுத்தி வந்துள்ளது என்னும் எண்ணம் வளர்ந்து இந்திய ஒற்றுமைக்கே தீமை விளைவித்து விடும் என இந்த மாநாடு அச்சம் தெரிவிக்கிறது.

இந்தச் சூழ்நிலையில் தமிழ்நாடு அரசுக்கும் இந்தி ஆதிக்கத்தைத்தடுத்துநிறுத்தும் கடமை இருப்பதால் பேரறிஞர் அண்ணா அவர்கள் 1968 ல் தமிழக சட்டப் பேரவையில்கொண்டு வந்து நிறைவேற்றிய தீர்மானக் கருத்தை எடுத்துக் காட்டி அதன் அடிப்படையில் மத்திய அரசு உடனடியாக அரசமைப்புச் சட்டத்தைத் திருத்த வேண்டும் என்று வலியுறுத்தி மீண்டும் ஒரு தீர்மானத்தை விரைவில் நிறைவேற்றி அனுப்ப வேண்டும் என்று தமிழக அரசை இந்த மாநாடு வலியுறுத்துகிறது.

தமிழ் மக்களின் கருத்தை ஏற்றுச் செயல்பட மத்திய அரசு முன்வராவிடில் நம்முடைய இந்தி எதிர்ப்பு உணர்ச்சியை அவர்கள் அறியுமாறு தகுந்ததொரு நடவடிக்கையைவிரைந்து தி. மு. க. மேற்கொள்ளுமெனத் தீர்மானிப்பதுடன் அனைத்துக் கட்சியினரும் இந்த மொழி உரிமைப் போராட்டத்திறகு உறுதவியாக இருக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறது,

அனைத்து மாநில ஆட்சி மொழிகளையும் யூனியன் ஆட்சி மொழிகளாக ஆக்குக

அரசமைப்புச் சட்டத்தைத் திருத்துக.

அதுகாறும் ஆங்கிலத்தை மட்டுமே பயன்படுத்துக.


இந்தியைக் கைவிடுக.

மாநிலங்களில் உள்ள மத்திய அரசு அலுவலகங்களில் மாநில மொழிக்கு முதன்மை தந்திடுக.

மறைமுகமாக இந்தியைப் புகுத்துவதை உடனடியாக நிறுத்துக என்று இந்த மாநாடு மத்தியஅரசை வற்புறுத்துகிறது

மத்தியஅரசு இந்தத் தீர்மானத்தை ஏற்று செயல்படுத்த உரியமுறையில் உணர்த்துவதற்காக,தந்தை பெரியாரின் நூற்றாண்டு கொண்டாடப்படும் இந்த ஆண்டில் பேரறிஞர் அண்ணா வழியில் நமது உணர்ச்சியை வெளிப்படுத்தும் வகையில் தி. மு. கழகம் தன்னை ஒப்படைத்துக் கொள்ளும் அந்தப் போரில் ஈடுபடவும் இந்தி எதிர்ப்பு கனலை அனைத்து மொழிச் சமத்துவம் வெற்றி பெறும் நாள் வரை அணையாதுகாத்து வளர்த்திடவும் தியாக உள்ளத்தோடு போராட தமிழ் நாட்டு மக்கள் அனைவரும் உறுதி கொள்ள வேண்டுமென இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.





# அகத்துறைப் படைப்புகள்

அகத்து உறையும் ஆயிரம் பிரச்சினைகள் இடையே
அகத்துறைப் படைப்புஎனும் கவியரங்கத் தலைமைதாங்க —
நகத்துறையும் அழுக்குக்கூட உடல்நலத்தைக் கெடுக்கும் என்று
பகுத்துரைக்கும் பயிற்சி பெற்ற
மருத்துவத்துறை மாணவர்கள்
வருத்துகின்றார்: ஒப்புக்கொண்டேன்...
மாணவர்கள் தமிழுக்கு விழா எடுத்தல்
மாபெரிய அதிசயமாய்ப் போன நாளில்
மருந்தாலும் வித்தை கற்போர்
விருந்தொன்றைப் படைக்கின்றார் தமிழுக்கென்றால்
சிரந்தாழ்த்தி வணங்க வேண்டும்
கரங்கூப்பித் தொழுதல் வேண்டும்
வேலை நிறுத்தமென்ற விழலுக்கு நீர்பாய்ச்சிப்
பாலை நிகர்த்தகல்வி பருகாமல் பாழ்படுதல்
சேலை நிகர்த்த விழிப்பெண்கள்
சேலை இழுத்தல் ஒருதொழிலாய்ச் சீரழிதல்
ஓநந்தில் சென்று பேருந்து கொளுத்தல் இவை விடுத்துச்
சீருந்தும் தமிழ்வளர்க்கச் சேர்ந்தவரே! வாழ்க! வாழ்க!
நானும் ஒருநாள் மாணவனாய் இருந்ததுண்டு—என்பெற்றோர்
நாணும் ஒருநிலைவராமல் நான் என்றும் நடந்ததுண்டு!
படித்திடும் போழ்தே
துடித்திடும் காதல்
எனக்குத்
தமிழ்மீது!
கடித்திடும் கரும்பென
இனித்திடும் தமிழ்ப்பணி —
அன்றொருநாள் ஆரூரில் நான்கண்ட
அரிதான தமிழ்நாடு தமிழ் மணவர் மன்றம்
அரிமா நடை பாரதிதாசனின்
அருவிநிகர் தமிழ்வாழ்த்தைப் பெற்றதுகாண்!
அன்றந்த விழாசிறக்க — அன்பாலே
அவர் அளித்த வாழ்த்து இதோ:-

"தண்பொழிலில் குயில்பாடும் திருவாரூரில்
தமிழ்நாடு தமிழ்மாண வர்மன் றங்காண்!
ஒண்மையொடும் உண்மையொடும் வாழ்த்தி டுங்காண்!
மக்களிடை எழுச்சிக்கு மருந்தா குங்காண்!
புன்வாய்ந்தோர் அல்லர்காண் திருவாரூரின்
புலிஇளைஞர்கள் தோள்கள் பூரித் தார்காண்!
வெம்பிற்றுக் காண்தமிழச் சிங்கக் கூட்டம்
கிழித்தெறியத் தேடுதுகாண் பகைக்கூட் டத்தை
வளம்பெரிய தமிழ்நாட்டில் தமிழ ரல்லார்
வால்நீட்டி னால்உதைதான் கிடைத்தி டுங்காண்!"

இந்தப்
புரட்சிக் கவிஞரது போர்முழக்கம்
புறம்அகம் நூல்கள்தரும் கவிமுழக்கம்
புதுமைத் தமிழின் பெருமுழக்கம்
பொங்கிடும் இளமையின் தனிமுழக்கம்!
அந்நாளை எண்ணுகின்றேன் —இன்பத்தை
நினைவாலே உண்ணுகின்றேன்
இந்நாளும் அதுபோல வாராதோ?
கண்ணன மாணவர்கள் கண்விழித்துப் பாராரோ?
பொன்னன தமிழ்காக்க ஓரணியில் சேராரோ?
என எண்ணி வலிக்கின்ற நெஞ்சுக்கு
ஏற்ற மருந்தாக இந்தவிழா அமைந்ததென்பேன்!
அகத்துறைப் படைப்பென்றும்
புறத்துறைப் படைப்பென்றும்
வகுத்திட்டார் இலக்கியத்தைப் பழந்தமிழர்
இகம்பரம் என்பது தமிழுமல்ல; தமிழர்க்குரியது மல்ல!
அகம்புறம் என்பதே தமிழாம்.
தமிழர்க்கே உரியதாய்த்
திணைபிரித்து எழுதிய தமிழன் திறனுக்கு
இணைகொடுத்து நிற்க இலக்கியமேது?
"கைக்கிளை முதலாம் பெருந்திணை இறுவாய்
முற்படக் கிளந்த எழுதிணை என்ப"
ஒல்காப் புகழ்வாய்ந்திட்ட
தொல்காப் பியம்சாற்றும் இதனை!
"அகம்பெரிதா? புறம்பெரிதா?" என
அன்றொருநாள் அன்பழகருடன் வாதிட்டேன் —
அறிஞர் அண்ணா இடைமறித்து விளக்கந் தந்தார்:-
"பகிர்ந்து கொள்ளக் கூடியது புறம்தம்பி —
பகிர்ந்து கொள்ள முடியாதது அகம்தம்பி!"
அந்த
அண்ணாவின் விளக்கம்தான் அகத்துறைக்கே விளக்காகும் —

## கலைஞர் கருணாநிதி

பண்பாடுடைய அகத்திணையின் பெருமைதனைப்
பாண்டவரும் பாஞ்சாலியும் உணராததால்
பகிர்ந்துகொண்டனர் அகத்துறையை ஐவருக்கும்
அது அவர்தம் மரபின்குற்றம்;
பண்பாடு அதுவெனப் பாராட்டி மகிழ்தல் —
பகுத்தறிவு அற்றோர்குற்றம்!
அகத்திணை புறத்திணை இரண்டே ஆயினும்
திணைத்துணையும் அகலாது திகழ்தல் காண்பீர் —
வேல்பாய்ந்த புண்ணோடு வீரன் வருவான் — காதலி
வேல்பாய்ச்சும் விழியாலே மருந்து தருவாள்!
குளத்துக்குள் மீன்போலக் கூடிக் கிடந்தாலும் — போர்க்
களத்துக்கு அழைப்பென்றால் கரை ஏறிடுவார்
கண்ணுக்குள் கண்வைத்துக் கலவிக்கலை தூய்த்தாலும்
மண்ணுக்குத் தீமையெனில் மறவர்குலம் எழுந்துவிடும்
அக்குலத்தின் மாண்பதனைச் சித்தரித்துப்
பொற்புடைய கவிமாரி பொழிவதற்குச்
சொற்குலத்தின் சொந்தக் காரரெலாம் வந்துள்ளார் —
நற்குலத்தைப் பழிப்பவர்க்கும்
நாக்குத் தழும்பேறியோர்க்கும்
தாய்க்குலத்தின் அறைகூவல்
தமிழ்க்குலத்தின் போர்ப்பரணி
கேட்கட்டும்! கேளாச் செவிப்பறையைக் கிழிக்கட்டும்!
அகத்துறையில்,
தலைவன் என்றும் தலைவி என்றும்
செவிலி என்றும் தோழன் என்றும்
தாய் என்றும் ஊர் என்றும்
நிலவு என்றும் தென்றல் என்றும்
தோழி என்றும் துணை நின்று
தோகை விரித் தாடும் தமிழில்
பாகைவெல்லும் கவிதந்து
வாகை சூடக் கவிஞர் உள்ளார் —
தலைவன் எனத் தலையற்றோர் சிலர்
சொல்லிக்கொள்ளும் இற்றைநாளில்
நிலையான அகத்திணையின் தலைவன் பற்றி
பாடக் கேட்போம் —
தலைவி என்பாள் தலைவிதியை
எண்ணிக்கொண்டு கிடப்பவளோ?
இல்லை! இல்லை!
தலைவிதியை மாற்றுதற்குத்
தோழியினைத் தூதாக்கிச்
செவிலியையும் தோதாக்கித்
தென்றல் சுமந்து வரும்
காதலனை
நின்றுசுடும் நிலவினிலே வரவேற்கக்
காத்திருப்பாள் —
தோழன் என்றும் துரோகியானதில்லை அகப்பாட்டில்!
புறப்பாட்டில் துரோகியுண்டு — அவனது ஆரம்பப்
புறப்பாட்டிலேயே அது வெளிச்சமாகும்!
ஊரார் பழிப்புக்குக் காதல் ஒளிந்து மறைவதில்லை —
ஆனால் இன்று
ஊரார் எதிரிலேயே கடற்கரையில் —
காருக்குள் — கலையரங்கில் —
காதல்சேட்டை என்ன நியாயம்?
ஊரார் எல்லாம் ஊனமுற்ற விழிப்படைத்தோர்
எனும் நினைப்போ?
அன்றிக்
காதலர்கள் கண்மூடிக் கொள்வதாலே
காசினியே கண்மூடிக் கொண்டதாகத் துணிதல் நன்றே
காதலுக்கும் வழிவைத்துக்
கடமைக்கும் இடம்வைத்துக்
கண்ணியத்தை நிலைநிறுத்திக்
கட்டுப்பாடுடன் வாழ்வதுதான்
அகத்துறைப் படைப்பாகும் — குடும்பக்
கட்டுப்பாடுடன் வாழ்வதுதான் — இன்றைய
அகத்துறைப் படைப்பாகும்!
அகத்துறையில் படைப்பென்று நினைத்து
ஆறு, ஏழு, எட்டென்று படைத்துவிட்டால் —
பின் அந்தப்
படைப்பினால் மிகுவது
பதைப்பே யாகும்!
அறிந்துசொன்னேன் — நன்றாய்ப்
புரிந்துசொன்னேன் — அனுபவத்தில்
தெரிந்துசொன்னேன் —
உணர்வீர் நன்கு!

---

தமிழனின் தலையைத் தடவ
வடவர் போட்ட சதித் திட்டமே

# இந்தித் திணிப்பு!

## தமிழனுக்கு இந்தி வேண்டுமா வேண்டாமா என்பதை



## யார் தீர்மானிப்பது?

:- பேரறிஞர் அண்ணா -:

(சென்ற இதழ் தொடர்ச்சி)

இந்தி எதிர்ப்பிலே அருணகிரி அடிகளைச் சிறைச்சாலைக்கு அனுப்பியவரும், என்னைச் சிறைச்சாலைக்கு அனுப்பியவரும் பெரியார் இராமசாமியை பெல்லாரி சிறைக்கு அனுப்பி "அது மிகவும் வெப்பமுள்ள இடமாயிற்றே, தள்ளாத வயதில் அங்கு அனுப்பலாமா?" என்று சட்டசபையிலே கேட்டால், 'உங்களுக்குப் பெரியாரைத் தெரியாது; எனக்குத் தெரியும். அவருடைய உடம்புக்கு வெயில் நல்லது" என்று வேடிக்கையாகப் பேசிய அதே ஆச்சாரியார் 'இந்தி நிச்சயமாகத் தடுக்கப்பட வேண்டும்—இந்தி கட்டாயபாடமோ இஷ்டபாடமோ அது எந்த முறையிலே வந்தாலும் தடுக்கப்பட வேண்டும் — தமிழ் நாட்டுக்குத் தமிழ் மொழி போதும். மற்ற நாடுகளோடு தொடர்பு கொள்வதற்கு ஆங்கிலம் இருந்தால் அது சாலச் சிறந்தது" என்று தனி அறையிலேயல்ல — எங்களையெல்லாம் கூட்டி வைத்துத்தான் சென்ற ஆண்டு சொன்னார்.

...அந்த நேரத்தில் நானும் பல நண்பர்களும் சென்றோம், இந்தியை அவசரப்பட்டு இங்கே திணிக்கக்கூடாது என்றும் உண்மையிலேயே தமிழ் மொழி தமிழ்நாட்டுக்குப் போதுமென்றும், பிறநாடுகளோடு தொடர்பு கொள்வதற்கு ஆங்கிலம் இருந்தால் போதுமென்றும் அன்றையதினம் பேசித் தீர்மானிக்கப் பட்டதில் யார் யார் கையொப்பமிட்டிருக்கிறார்கள் என்ற பட்டியலை மட்டும் உங்களிடத்தில் படிக்கின்றேன். ஏன் நான் இந்தப் பட்டியலைப் படிக்கிறேன் என்றால் இந்தப்பட்டியலுக்குவெளியே இருக்கின்ற அரசியல் கட்சித் தலைவர்கள் யாருமில்லை. இந்தப் பட்டியலுக்கு அப்பாற்பட்ட அறிவாளிகள் அதிகம்பேர் நாட்டிலே இருக்க முடியாது. இந்தப் பட்டியலிலே உட்பட்டிருக்கின்ற பெயர்கள் அத்தனையும் தனிப்பட்ட முறையிலேயும் சிறந்தவர்கள்; சிலர் குறிப்பிட்ட சில இயக்கங்களுக்குக் கர்த்தாக்களாகவும் தலைவர்களாகவுமிருந்து நடத்திச் செல்பவர்கள். இவர்களெல்லாம் எதிர்க்கின்றார்கள். 1956 ல் என்பதை உங்களுக்குக் கவனப்படுத்த அந்தப் பட்டியலைப்படிக்கிறேன்.

முதலிலே கையெழுத்திட்டவரும் இந்த வாசகத்தை எழுதியவரும் ஆச்சாரியார் அவர்களாவார்:

இரண்டாவதாகக் கையெழுத்திட்டவர் பெரியார் ஈ. வெ. இராமசாமி திராவிடர் கழகத்தலைவர்.

பி. டி. இராசன்—ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்:

இராஜா சர் முத்தையா செட்டியார்-அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்குசான்சலராக இருந்து வருபவர்.

அடுத்தபடி நான்.

திராவிட பார்லிமெண்டரி கட்சித் தலைவர் சுயம் பிரகாசம்.

எஸ். ஜி மணவாள இராமானுசம், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே துணைவேந்தராக இருந்தவர்.

டி. எம். கிருஷ்ணசாமி அய்யர் — திருவாங்கூர் — கொச்சியிலே பிரதம நீதிபதியாகப் பணியாற்றியவர்

இவர்களெல்லாம் கூட சாதாரணமாக இருக்கும்; இப்போது படிக்கின்ற பெயர் உங்களுக்கு நம்பிக்கையூட்டுவதாக இருக்கும்:

ம. பொ. சிவஞானகிராமணியார்—தமிழரசுக் கழகத் தலைவர்.

ஆ. இரத்தினம்—தாழ்த்

(10-ம் பக்கம் பார்க்க)

# இந்தியாலேயே இந்தியா சீர்குலையும்!

விரும்பாத மற்றவர்கள் மீது சுமத்தப்படும் இந்திக்கு ஆட்சிமொழியாகும் தன்மைதான் இருக்கிறதா? உலக மொழியாகப் பரந்து வளம் சிறந்து நிற்கும் ஆங்கிலம்கூடக் கருத்துகளைத் தெளிவுபடுத்துவதற்கு இலத்தீன் முதலிய மொழிகளிலிருந்து சொற்களையும்சொற்றொடர்களையும்எடுத்தாளுகிறதென்றால், இலக்கண வரம்பும், இலக்கிய வளமும் இன்றி, இளம்பருவத்திலுள்ள இந்திமொழி ஆட்சி மன்றங்களிலும், அறங்கூறவைகளிலும், பல்கலைக் கழகங்களிலும்பயன்படு கருவிமொழியாகக் கொள்ளல்தகுமா?

## தமிழின் சிறப்புக்கள்

நாட்டுமொழிகள் அனைத்திலும் நம் தமிழ்மொழியே தொன்மையும், வளமையும் உடையது.நீரால் நெருப்பால் கரையானால்காலத்தால்பகைவரால் அழிந்தனபோக,எஞ்சிநிற்கும் இலக்கண இலக்கியங்கள் எந்நாட்டவரும் பெருத ஒப்பற்ற கருவூலங்களாகும்.

சிந்தைக்கினிய, செவிக்கினிய வந்த இருவினைக்கும் மாமருந்தாம் தேவார திருவாசகங்களையும், திருவாய்மொழி போன்ற அருட்பாக்களையும் நிலவுலகில் வேறு எங்கணும் காண்பதரிது.

அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கின் திறம் தெரிந்து செப்பிய திருக்குறளை பிற எம்மொழி பெற்றுள்ளது?

மக்களின் மனவியல்புகளையும், இயற்கையெழில் நலங்களையும் எடுத்துரைக்கும் எட்டுத்தொகை பத்துப்பாட்டுப் போன்ற இலக்கியங்களை எந்நாடு கொண்டுள்ளது?

சிலப்பதிகாரம், மணிமேகலை, சிந்தாமணி, இராமாயணம், பெரிய புராணம் முதலிய காப்பியங்களுக்கு, ஓமர், செகப்பிரியர். மிலிட்டன் முதலானோர் நூல்கள் தாமும் ஒப்பாகுமோ?

எழுத்துக்கும் சொல்லுக்குமேயன்றி மக்கள் வாழ்க்கைக்கும் இலக்கணம் கூறும் தொல்காப்பியம் போன்றதொரு நூல் எந்நாட்டிலும் எம்மொழியிலும் இதுகாறும் தோன்றியதில்லை.

மொழியை இயல், இசை, நாடகம் என மூன்று பிரிவாக வகுத்து முத்தமிழ் என வளர்த்த பெருமை தமிழுக்கே உரியது.

நீதிநெறி தவறாது செங்கோல் ஓச்சிய சேர சோழ பாண்டியராகிய மூவேந்தருடைய ஆட்சி மன்றங்களிலும், அறங்கூறவைகளிலும், ஆண்டவன் கோயில்களிலும் வீற்றிருந்த தமிழின் தன்னேரிலாத கன்னித்தன்மை வேறு எம்மொழியும் பெற்றிலது.

இத்தனைச் சீரும் சிறப்பும் வாய்ந்த தமிழ்மொழி அரசு கட்டிலேறி ஆட்சிபுரிவதற்கும் கல்லூரிகளில் பாடமொழியாவதற்கும் தகுதியில்லையெனின் வேறு எம்மொழிக்குத்தான் அத்தகுதியுண்டு?

இவ்வாறு வழிவழியாக நம் முன்னோர் நமக்கு ஈந்த அரும்பெறற் செல்வமாகிய தாய்மொழிக்குப் பணிபுரிதலினும் சிறந்த கடன் வேறு உளதோ? அதன் பொருட்டு நம் ஆருயிரையும் துறப்பது மிகையாகாது.

ஒப்பற்றபண்பாட்டையும் நாகரிகத்தையும் தரும் மொழியை இழந்து, வெறும் மண்ணையாளும் உரிமையைப் பெறுவதால் நாம் அடையும் பெருமையும் பயனும் என்ன?

"ஒட்டார் பின்சென்றுஒருவன் வாழ்தலின் அந்நிலையே
கெட்டான்எனப் படுதல் நன்று"

என்னும் வள்ளுவர் வாய்மொழிக்கிணங்க மடிவது மேலன்றோ?

அயலவர் ஆட்சியினின்றும் விடுதலையடைந்த நாம், மொழிக்காக இன்றுஅரசோடு அறப்போர் புரிய நேர்ந்திருப்பது வேதனைக்குரியதாகும்.

இதற்கெல்லாம் மூலகாரணம் நம் மரபு, பண்பாடு, நாகரிகத்துக்கு ஒவ்வாத, விரிந்து பரந்த கலப்பட அரசியல் அமைப்பேயாகும்.

இந்தியப் பேரரசு,

'வேலன்று வென்றி
தருவது மன்னவன்
கோல்அதூம் கோடா
தெனின்'"

என்ற உண்மையை உணர்ந்து, அடக்குமுறையைக் கைவிட்டு,

'குடிதழிஇக் கோலோச்சும்
மாநில மன்னன்
அடிதழிஇ நிற்கும் உலகு''

என்ற அறிவுரையைத் தெளிந்து மக்களைத் தழுவி ஆண்டு நாட்டில்ஒற்றுமையை நிலைநிறுத்துமென்று எண்ணுவோமாக.

நாட்டின் ஒற்றுமைக்காக ஒரு மொழி வேண்டுமென்று சொல்லப்படுகிறது. ஆனால் இது மாறுனபயனையேவிளைவிக்கின்றது.

## இந்தி கலப்பு மொழியே

பல்வேறு மொழி பேசும் ஐம்பத்தைந்து கோடி மக்களைக் கொண்ட இந்தியத் துணைக்கண்டத்தில், எல்லோர்க்கும் பொதுவான ஒரு மொழியை உருவாக்க எண்ணுவது, வெறும் பகற்கனவாகும். எந்த வேற்று மொழியும் நாட்டுப் புறங்களுக்குச் சென்று பரவ முடியாது என்பதுயாவரும்அறிந்த உண்மை கலப்புமொழியான இந்தியை ஒருக்காலும் அரசியல் மொழியாக உயர்த்த முடியாது. அது, இலக்கணம், இலக்கியம், சாத்திரம், கற்பனை, கருத்து, உருவகம் முதலியவற்றால் வளம் பெற்றதன்று. முனிவர்கள், கவிஞர்கள், கலைஞர்கள், விஞ்ஞானிகள், எழுத்தாளர்கள், பேச்சாளர்கள்மலிந்தன்றோஒருமொழி வளம் பெற முடியும்! இந்தி இந்நிலை அடையப் பன்னூறு நூற்றாண்டுகளாகும் அரசியல் உடன்படிக்கைக்கும் அறமன்றத்திற்கும் பல நூற்றாண்டுகளாக நன்கு பண்பட்டு வந்துள்ள ஆங்கிலமே குறைபாடுடையதாய். இலத்தீன்,பிரஞ்சு முதலிய வேற்று மொழிச் சொற்களையும், சொற்றொடர்களையும் இரவல் வாங்கவேண்டிய நிலையில் இருக்கிறதென்றால், நேற்றுத் தோன்றிய இந்தி இதற்கு எவ்வாறு ஏற்றதாகும்?

தாய்மொழிக்கு முதலிடமும், உலகமொழியாகிய ஆங்கிலத்திற்கு இரண்டாவது இடமும் கொடுப்பதே பொருத்தமும் முறையுமாகும்.

## இந்தியும் வேற்றுமொழியே

இனி, ஆங்கிலம் எவ்வளவோ உயர்ந்த மொழியாயிருந்தும் வேற்று மொழியென்று அதை ஒழித்து. அதற்கு மாறாக இந்தி மொழியை அரசியல் மொழி

★★★★ ★★★★★★★

**டாக்டர் மெ. சுந்தரம்**

**எ. ஏ., எம்.லிட், பி.எச்டி**

★★★★★ ★★★★★★

யாக்கத் துணிந்திருக்கிறார்கள். வட்டாரமொழி பதினான்கில் ஒன்றான இந்தியை மத்தியஅரசினர் மேற்கொண்டு, அதை மட்டும் வளர்க்க முறைதவறிப் பெரும் பொருள் செலவு செய்கின்றார்கள். எப்படி ஆங்கிலம் வேற்று மொழியோ, அதைப்போலவே தென்னாட்டிற்கும் ஏனை வட்டாரங்கட்கும் இந்தியும் வேற்று மொழி என்பதை இவர்கள் உணராதது வருந்தத்தக்கது. ஆங்கிலத்திற்கும் இந்திக்குமாவது இனத் தொடர்புண்டு. தமிழுக்கும் இந்திக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை இந்திபேசுபவர்க்கு இருக்கும் தாய்மொழிப் பற்றுப் போலவே, மற்ற மொழி பேசுவோர்க்கும் அப்பற்று ருக்கும் என்பதை அவர்கள் ஒரு சிறிதும் நெஞ்சில் நினைக்கிறார்களில்லை.

செக்கோசுலோவேகியாவில் தங்கள் மொழியைப் புகுத்த முயன்ற செர்மானியர் படுதோல்வியுற்றனர் யுகோசுலேவியாவில் மூன்று அரசு மொழிகள் இருக்கின்றன அவ்வாறே கானடா. பெல்சியம், ஒவ்வொன்றிலும் இரண்டு மொழிகள் உள்ளன. உருசியாவில்கூட ஆறுமொழிக்குஇடம் கொடுத்திருக்கிறார்கள்.அந்தப் பொறுமைகூட நமக்கில்லையே!

சிறு நாடுகள் மூன்று, நான்கு மொழிகளை ஏற்றுக்கொண்டிருக்கும் பொழுது, பெருநாடாகிய இந்தியா பத்துப் பன்னிரண்டு மொழிகளை அரசியல் மொழிகளாகக் கொள்வது மிகையாகாது.

சுவிட்சர்லாந்தில் நூற்றுக்கு 72 பேராக உள்ள செர்மன் மொழி பேசுபவர். நூற்றுக்கு 21 பேராக இருக்கும் பிரஞ்சு மொழி பேசுபவர் மீதாவது. இவர்கள் இருவரும் சேர்ந்து, நூற்றுக்கு 6 பேராகவுள்ள இத்தாலி மொழி பேசுபவர் மீதாவது செர்மன் பிரஞ்சு மொழிகளைச் சுமத்தாமல். எல்லோரு சேர்ந்து நூற்றுக்கு ஒருவராகவுள்ள உரோமான்சு மொழி பேசுபவரையும் மதித்து. அவர்கள் மொழியையும் அரசு மொழியாகஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் இதுவன்றோ அறம்! நேர்மை! செம்மை! அரசு முறைமை! பெரும்பான்மையோர் சிறுபான்மையோர் இடத்து, அன்பும் கண்ணியமும் மதிப்பும் வைத்துள்ளதால் சுவிட்சர்லாந்தில்மக்கள் ஒன்றுபட்டு ஒற்றுமையாக வாழ்கின்றார்கள்

## இந்தியா? இந்தியாவா?

அவ்வாறு இந்தியாவிலும் எல்லா வட்டார மொழிகளையும் முறையாகப் பேரரசின் மொழியாக்காவிட்டால்பிளவு ஏற்பட்டு நாடு சின்ன பின்னமாவது திண்ணம் நாடு அடிமையுற்றிருந்தபோது பிறந்து வளர்ந்த இப்போதுள்ள தலைமுறை இதை ஒருவாறு பொறுத்தாலும், பின் தலைமுறை இதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது; சீறி எழுந்து செந்நீர் பெருகி ஓடச்செய்யும் என்பதைத்தலைவர்கள் நினைவிற் கொள்ள வேண்டும். நேரு பெருமகனிடம் உள்ள அன்பாலும் மதிப்பாலும் அப்போது மக்கள் அவைகளைத் தாங்கிக்கொண்டார்கள். அவருக்குப் பிறகு எல்லா மக்களையும் அன்போடு அணைத்து ஆளும் திறமையும் நேர்மையும் உடையோர் ஒருவரையும் காணேம். ஆகவே, இந்தப் பெரும் மொழிச் சிக்கலைத் தம் வாழ்நாளிலேயே நன்கு தீர்த்து வைக்குமாறு நேரு பெருமகனுக்கு எடுத்துரைத்தனர். ஆனால் அது செயற்படவில்லை; இன்று பெருஞ்சிக்கலாகப் பேருருவம் எடுத்துள்ளது.

இந்தி, பாரத நாட்டின் பொது மொழியாகவும் அரசியல் மொழியாகவும் உயர்ந்தால், தமிழ் தன் உரிமையும் பெருமையும் இழந்து இன்னலுறும் — என்று அஞ்சி, பேராசிரியர் இலக்குவனார் முதலிய தமிழ்ப் பெரும் புலவர்கள், தமிழைக் காத்து அதையும் அரசியல் மொழிகளில்ஒன்றாக உயர்த்தும் நோக்கத்தோடு தமிழ்க் காப்புக் கழகத்தைத் தோற்றுவித்து அரும் பெரும் தொண்டாற்றி வந்திருக்கின்றார்கள்.

நாட்டின் ஒற்றுமைக்காகப் பொதுமொழியாகவும், ஆட்சி வசதிக்காக அரசியல் மொழியாகவும் இந்தி மேற்கொள்ளப்படுகிறதென்று கூறுகின்றார்கள்

## மொழியால் ஒற்றுமையா? வேற்றுமையா?

மொழி, மக்களிடையேஒற்றுமையை உண்டு பண்ணுமா, உண்டுபண்ணியிருக்கின்றதா? ஒரே மொழி பேசும் வடநாட்டில் உள்ள இந்துக்களையும் முகமதியர்களையும் விட, வெவ்வேறு மொழிபேசும் வடநாட்டு இந்துக்களும்தென்னாட்டு இந்துக்களும் ஒற்றுமையாக இருக்கின்றார்கள் அல்லவா? மக்கள் ஒற்றுமைக்கு மொழியை விடச் சமயத்துக்கு மிக்க ஆற்றல் உண்டு என்று கூறிஅதற்காக எல்லோர்க்கும் பொதுவான ஒருதேசியசமயத்தைப்படைக்க முற்படலாமா?

அவ்வாறே, விரிந்து பரந்த பல மொழி பேசும் 55 கோடி மக்களைக் கொண்ட பாரத நாட்டில் ஒற்றுமையின் பேரால் ஒரு பொதுமொழியைப் புதிதாகப் படைத்து வலுவில் சுமத்த எண்ணுவதும் முயல்வதும் இயலாததாகும், இதற்கு நாட்டில் ஏற்பட்டிருக்கும் எதிர்ப்பும். கிளர்ச்சியும் பூசலும். போரும் போதிய சான்றாகும் கருதிய பயனைத் தருவதற்கு மாறாக வேண்டாத தீமையேவிளைவித்திருக்கிறது ஆகவே இதனைக் கைவிடுவதே அறிவுடையோர் செயலாகும்

இனி ஆட்சி வசதிக்காக இந்தியை மேற்கொள்வது பொருத்தமும் முறையும் ஆகுமா? 'தனக்கு இனிது என்று வலிதிற்பிறர்க்கு இன்னா செய்தால்'' நெறியும் அறமுமாகுமா?

## அனைத்து மாநில மொழிகளும் ஆட்சி மொழிகளே

உலகிலே முதன் முதல் மக்களாட்சியைமேற்கொண்டு இதுகாறும் ஒற்றுமையுடன் வெற்றிபெற நடத்திவரும் சுவிட்சர்லாந்தின் அடிச்சுவட்டை நாம் பின்பற்றலாகாதா? பல்வேறு இனங்களும் மொழிகளுமாக 40 இலட்சம் மக்களை மட்டும் கொண்ட அந்த நாட்டில் நூற்றுக்கு எழுபத்து மூவர் செர்மனும், இருபத்தொருவர் பிரஞ்சும், ஐவர் இத்தாலி மொழியும் பேசுகின்றனர் இம்மூன்று மொழிகளும் அரசியல் மொழிகளாக ஒத்தவுரிமையில் உள்ளன. முக்கால் பாகமுள்ள செர்மனியர் தங்கள்மொழியை ஏனைப் பிரஞ்சு, இத்தாலியர் மீதோ நூற்றுக்குத் தொண்ணூற்று நால்வாராக உள்ள செர்மனியாரும் பிரஞ்சுக்காரரும் சேர்ந்து நூற்றுக்கு ஐந்து விகிதமுள்ள இத்தாலியர் மீதோ, தம் மொழிகளைச்சுமத்தும் கொடுமையை மேற்கொள்ளவில்லை.நெறி,நேர்மை ஒழுங்குமுறை தவறாத கொள்கையாலும் பிறர்உணர்ச்சியை மதிப்பதாலும்சுவிட்சர்லாந்து ஒன்றுபட்டு ஒற்றுமையோடு கூடி இனிது வாழ்கின்றது இதுபோலவே, செக்கோசுலேகியாவில் நான்கு மொழியும், கனடா, தென்னாப்பிரிக்கா, பெல்சியம் நாடுகளில் இரண்டு மொழிகளும் அரசியல் மொழிகளாகவுள்ளன. உருசியாவிலும்16 மொழிகள் இருக்கின்றன பாரத

(தொடர்ச்சி 10-ம் பக்கம்)

# பெரியார் வாழ்க்கை வரலாறு ★ வெளியிட என்ன தடை? ★

தேசீய புத்தக டிரஸ்ட் என்னும் அரசு நிறுவனம் தந்தை பெரியார் வாழ்க்கை வரலாற்று நூலை வெளியிட வேண்டும் என்ற கோரிக்கையை எட்படியெல்லாம் தட்டிக்கழித்து, கடைசியில் கையை விரித்து விட்டது என்பதை இக்கட்டுரை விளக்குகிறது.

# தேசீய புத்தக நிறுவனத்தின் ★ திட்டமிட்ட புறக்கணிப்பு ★

இந்திய அரசின் துணைநிறுவனமாகிய தேசிய புத்தக நிறுவம் (நேஷனல் புக் டிரஸ்ட்), பல துறைகளில் சிறப்போங்கிய இந்தியப் பெருமக்களின் வாழ்க்கை வரலாறுகளைப் புத்தகமாக வெளியிட்டுப் பரப்பி வருகிறது. அந்த வகையிலே, நமது தேசியத் தலைவர்களில் ஒருவரான பெரியார் ஈ, வெ. ரா. அவர்களின் வரலாற்றையும் இந்த நிறுவனம் வெளியிடும் என்று எதிர் பார்த்தோம். அந்த நிறுவனம் ஏனோ இதிலே கவனம் செலுத்தியதாகவே தெரியவில்லை.

இந்த நிலையிலே, 1975-ல் என்னை இந்த நிறுவனத்தின் (புத்தகத் தேர்வுவெளியீட்டு) ஆலோசனைக் குழுவில் ஓர் உறுப்பினராக நியமித்தார்கள். அவ்வப்போது இந்த ஆலோசனைக் குழு கூடும் என்றும், தேசியப் புத்தக நிறுவனம் மேற்கொள்ள வேண்டிய திட்டங்களைப் பற்றிஆராயும் என்றும் எனக்குத் தெரிவித்தார்கள் என்றாலும், நான் உறுப்பினராகச் சுமார் ஒன்றரை ஆண்டு ஆகியும், ஆலோசனைக் குழு கூட்டப்படவே இல்லை; கடிதம் மூலமாகக் கூடப் புத்தக நிறுவனம் என்னிடம் எந்த ஆலோசனையையும் கோரவில்லை.

நான் பொறுமை இழந்தேன். "ஆலோசனையே செய்யாத ஒரு குழுவுக்கு ஆலோசனைக் குழு என்று பெயர்ஏன்? அந்தத் தூங்கு மூஞ்சிக் குழுவில் நான் ஏன் உறுப்பினராக இருக்க வேண்டும்?...'

எனது கசப்பை வெளியிட்டும், புத்தக நிறுவனத்தின் பொறுப்பின்மையைச் சுட்டிக் காட்டியும் அதன் நெறியாளருக்குக் கடுமையாக ஒரு கடிதம் எழுதினேன். சில நாட்களிலேயே, அவர் சார்பில் எழுதப்பட்ட பதில் கடிதம் வந்தது. "ஏற்கனவே போட்ட திட்டங்கள் இன்னும் செயல் படுத்தப்படவில்லை, நிதி நிலைத் தடுமாற்றத்தால் சில திட்டங்களை மேற்கொள்ள முடியவில்லை. அதனால்தான் புதிய ஆலோசனைக்குழுவைக் கூட்ட இயலவில்லை, விரைவிலேயே கூட்டுகிறோம்; அல்லது கடிதம் மூலம் குழு உறுப்பினர்களின் கருத்துக்களைக் கோருகிறோம்'' என்று அதிலே எழுதியிருந்தார்கள்,

## நான் தந்த திட்டம்

இதுதான் இங்கே வழக்கமாக நடந்துவரும்மேல் சாதித் தந்திரம்! வசதியாளிகள் மற்றவர்களைக் கழித்துக் கட்ட நிறுத்தும் நடைமுறையும் இதுவே. பெரியநிறுவனங்களில் நம்மையும் உறுப்பினராக்குவார்கள்: ஆனால், திட்டங்களை நமக்குத் தெரியாமலே நடத்திக்கொள்வார்கள் எனவே, நானாகவே ஒரு திட்டத்தை அந்த நிறுவனத்துக்கு வழங்கினேன்,

அந்தத் திட்டம் இது- "நாம் இந்தியப் பெருமக்களின் வரலாறுகளை வெளியிட்டு வருகிறோம்; அந்த வரிசையில் இடம்பெறத்தக்க ஒருவர் நமது பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள், அருஞ்சாதனைகள் புரிந்து தமது 95 ஆம் வயதில் காலமான அப் பெருமகனின் நூற்றாண்டு விழா 1978 செப்டம்பரில் வருகிறது அப்போது வெளிவரும் விதமாக அவருடைய வாழ்க்கை வரலாற்றை எழுத ஏற்பாடு செய்யுங்கள்'' என்று தெரிவித்தேன்.

தேசியப் புத்தக நிறுவனத்தின் வேறொரு வேலையாக என்னிடம் வந்த அதன் அதிகாரி ஒருவர் பெரியார் வாழ்க்கை வரலாறு வெளியிடும் திட்டம் பற்றியும் என்னிடம் பேசினார் அவர் விரும்பியதற்கு இணங்க பெரியார் வரலாற்றை எழுதத்தக்கூடியவர்களாகத் திரு, கி. வீரமணி போன்றவர்களின் பெயர்களைசிபாரிசு செய்தேன்.

இதற்கிடையில். பெரியார் நூற்றாண்டு விழா வந்தது. 17-9-78.ல் மத்திய அரசின் அஞ்சல்துறை பெரியார் அஞ்சல் முத்திரை ஒன்றையும் வெளியிட்டது. தமிழக அரசு 17-9-78 முதல் 17-9-79 வரை ஓராண்டுக் காலம், அரசின் சார்பில் பெரியார் நூற்றாண்டு விழா நடைபெறும் என்று அறிவித்தது, ஆயினும் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே தேசியப் புத்தக நிறுவனத்துக்குத் தெரிவிக்கப்பட்ட (பெரியார் வாழ்க்கை வரலாறு வெளியிடும்) ஆலோசனை மீது எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை,

நான் உறுப்பினராக இருந்த ஆலோசனைக் குழுவின் ஆயுள், எந்தவிதமான ஆலோசனையும் திட்டமும் இல்லாமலே முடிவடைந்தது. என்றாலும், நாட்டின் குடிமக்களில் ஒருவன் என்ற முறையில், 27-11-78 ல் தேசியப் புத்தக நிறுவனத்துக்கு இதுபற்றி ஒரு கடிதம் எழுதினேன்; இது வரையில் திட்டமிடப்படா விட்டாலும். இப்போது திட்டமிட்டு 17-9-79க்குள்ளாவது பெரியார் வாழ்க்கை வரலாற்றை வெளியிடலாம்'' என்றும் தெரிவித்தேன், உடனேயே அந்தக் கடிதத்துக்குப் பதில் (4-12-78ல்) வந்தது. அதைத் தொடர்ந்து 17-12-78லும் ஒரு கடிதம் எழுதினார்கள். அந்தக் கடிதங்களில் கண்ட செய்தியைப் பார்த்து மிகுந்த வியப்பும் ஏமாற்றமும் அடைந்தேன்.

'ஆலோசனைக் குழு உறுப்பினர்களிலே ஒருவர் இந்தத் திட்டத்தைச் சிறிது தள்ளி வைக்கலாம் என்று கருத்துத் தெரிவித்ததால், நாம் திட்டமிட்டபடி பெரியார் வரலாற்றை வெளியிடும்பணியை நிறைவேற்ற முடியவில்லை. அதன் பிறகு வாழ்க்கை வரலாறுகள் பற்றி ஆலோசனை வழங்கும் குழு மாற்றி அமைக்கப்பட்டுள்ளது, இந்தக் குழுவின் கூட்டம் இனிமேல்தான் நடைபெற வேண்டும். இருப்பினும், கடிதம் மூலமாகவே குழு உறுப்பினர்களின் கருத்தைக் கோருவதாக் இருக்கிறோம்; அவர்கள் ஒப்புதல்வழங்குவார்களானால் (பெரியார்) வாழ்க்கை வரலாற்றை வெளியிடும் பொறுப்பை மிகுந்த மகிழ்ச்சியோடு மேற்கொள்வோம்.'' இதுதான் தேசியப் புத்தக நிறுவனம் எனக்கு எழுதிய முதலாவது(4 12 78) கடிதத்தின் கருத்து.

பெரியார் வரலாறு வெளியிடும் திட்டத்தைத் தள்ளி வைக்கலாம் என்று தெரிவித்த உறுப்பினர் யாரோ தெரியவில்லை. அவர் ஏன் அப்படி ஓர் ஆலோசனையைச் சொன்னார் என்பதும் விளங்கவில்லை.

'சங்கரர் வரலாறும் புரந்தரதாசர் வரலாறும் வெளிவருவதில் எந்தத் தடையும் இல்லை; துளசிதாசரின் 'புனித' கருத்துக்களைத் தப்பும் தவறுமாகத் தமிழாக்கித் தருவதிலும் புத்தக நிறுவனம் வேகமாகத்தான் செயல்படுகிறது. ராஜாராம் மோகன்ராய் கந்துகூரி வீரேசலிங்கம் போன்ற சீர்திருத்தச் செம்மல்களின்வரலாறுகளையும் புத்தக நிறுவனம்வெளிட்டுள்ளது. பெரியார் வாழ்க்கை வரலாறு மட்டும் தள்ளிப் போடப்படுவானேன்?...

## யார் கேட்டது?

இப்படி நான் சிந்தித்துக் கொண்டு இருந்தபோதே, புத்தக நிறுவனத்தின் 15-12-78 கடிதமும் வந்தது "தாங்கள் மிகுந்த அன்புடன் தெரிவித்திருந்த ஆலோசனையை (பெரியார் வாழ்க்கை வரலாறு வெளியிட வேண்டும் என்று தெரிவித்த ஆலேசாசனையை) ஏற்க முடியாது என்று புதிய ஆலோசனை சபை சொல்லிவிட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்...இதுதான் அந்தக் கடிதத்தின் வாசகம்.

புதிய ஆலோசனைக்குழு இப்படி ஒரு முடிவிற்கு வரக் காரணம்என்ன? ஆந்திர நாட்டுச் சீர்திருத்தச் செம்மலான வீரேசலிங்கத்தின் சுயசரிதையைக் கூட வெளியிட்ட தேசியப் புத்தக நிறுவனம் பெரியார் வரலாற்றை வெளியிடத் தயங்குவது ஏன்? இந்தியநாட்டின் ஏனைய சாதனை மேதைகளைவிட விடப் பெரியார் எந்த வகையில் குறைந்து போனார்?

இந்தக் கேள்விகளை யாரிடம் கேட்பது? யார் கேட்பது? என்னைப் போன்ற ஒரு தனிமனிதன் கேட்கும் கேள்விக்கு இப்படி மொட்டையாக ஒரு பதில் கிடைத்தால் மேற்கொண்டு எடுக்க வேண்டிய நடவடிக்கை என்ன? அதை யார் எடுப்பது?

இந்தப்பணிகளுக்குத் தமிழ் மக்களின் வரிப்பணமும் செலவிடப்படுகிறது என்பதை அவர்கள் உணர்வதில்லை. இதனால் தமிழகத்தின் சிறப்பும் அதன் தலைமைகளுடைய பெயரும் வடக்கு இந்தியப் பகுதிகளில் இன்றுவரை, சரிவரப் பரவவே இல்லை. இந்தக் குறை இல்லாமல் சீராகக் காரியங்கள் நடந்து வந்திருந்தால் பெரியார் அஞ்சல் முத்திரை வெளியிடுவதாக ஒரு சாதாரண நிகழ்ச்சிக்காக நாம் இத்தனை போராட்டம் நடத்த நேர்ந்திருக்குமா? (வடநாட்டில் மகாபாரதக் காலத்தில் இருந்தவர்களாகச் சொல்லப்படும் "மகாராஜா''க்களுக்கெல்லாம், நினைத்தவுடன் அஞ்சல் முத்திரை வெளியிடப்படுகிறது என்பது கவனிக்கத் தக்கது)

நாட்டின் வெவ்வேறுபகுதிகளில் உள்ள மக்களிடையே ஒருவருக்கொருவர் வெறுப்புணர்ச்சி ஏற்படுவதற்கு இத்தகைய விடுபாடுகளும் புறக்கணிப்புகளுமே காரணமாகின்றன என்பதைத் தொடர்புடைய அரசுகள்உணரவேண்டும். இதுபோன்ற நிகழ்ச்சிகளைக் கவனியாமல் உறங்கிக் கிடந்துவிட்டு —தும்பைவிட்டு வாலைப்பிடிப்பது போல... என்றைக்காவது எழுந்து கொண்டு 'தேசிய ஒருமைப் பாட்டு'ப் புலம்பல்களிலே ஈடுபடுவது பேதமை அல்லவா?

சாலை இளந்திரையன்

★


## நம் நாடு

சந்தா விவரம்

ஓராண்டு சந்தா ரூ. 26-00
ஆறுமாத சந்தா ரூ. 13.00

ஆறு மாதங்களுக்குக் குறைந்த சந்தா ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது,

# அண்ணா உரை....

(7—ம் பக்கத் தொடர்ச்சி)

தப்பட்டோர் பெடரேஷனைச் சேர்ந்தவர்.

எஸ். ஆர். வெங்கட்ராமன் — 'சர்வண்ட்ஸ் ஆப் இந்தியா சொசைட்டியிலே செயலாளராக இருப்பவர்.

கி ஆ. பெ. விசுவநாதம் — தமிழ்ப் பேரவைச் செயலாளர்.

பேராசிரியர் இரா. பி. சேதுப்பிள்ளை — சென்னைப் பல்கலைக் கழகம்.

டாக்டர். மு. வரதராசனார் — பச்சையப்பன் கல்லூரியிலே பேராசிரியராக இருப்பவரும், இன்றையத் தினம் சர்க்காரிடத்திலே வீரச் சுதந்திரம் பதக்கம் பெற்றவருமான நம்முடைய நண்பர் அவர்கள்.

மற்றொருவர் வி. எஸ், தியாகராச முதலியார் — திருவாரூரைச் சேர்ந்தவர்.

எம். பி. சோமசுந்தரம் — 'கல்கி' பத்திரிகைக்கு அந்த நாளிலேயே ஆசிரியராக இருந்தவர்.

அமிர்த கணேச முதலியார் — செஞ்சிலுவைச் சங்கத்திலே தலைவராக இருப்பவர்.

டாக்டர் ஏ. சீனிவாசன். எம் எல். சி. யாக இருந்தவர்.

ஏ. சுப்பையா — இந்தக் கூட்டத்தைக் கூட்டியவர்,

...ஒரு மொழி இந்த நாட்டுக்குள்ளே வருகிறதென்றால், அது எந்த நாட்டுக்குள்ளே வருகின்றது? எந்த நாட்டிலேயிருந்து வருகிறது எந்தநேரத்திலே வருகின்றது? என்ன சொல்லிக்கொண்டு வருகின்றது? — இவைகள் நமக்கு விளக்கப்பப்பட வேண்டும், இவைகள் விளக்கப்படுவதற்கு நாட்டை ஆளுகின்ற அமைச்சர்கள் இன்றைய தினம் சொல்லுகின்ற பதிலெல்லாம் "இந்தியா ஒன்றாக இருக்க வேண்டும்! இந்தியாவை ஒன்று படுத்த ஒரு மொழி வேண்டாமா?" என்று சொல்லுவதுதான்.

வடநாட்டிலே உள்ளவர்கள். தென்னகத்தாரை — தமிழகத்தாரை, சிறப்பாகவும் குறிப்பாகவும் திராவிட இயக்கத்தாரை தலையெடுக்கவிடாமல் தட்டவேண்டுமானால் தமிழ்மொழியிலே இருக்கின்ற ஆர்வத்தைக் குலைக்கவேண்டும்; தமிழ்மொழிக்கு இருக்கின்ற இடத்தைப் பறிக்க வேண்டும்; தமிழ் மொழியினாலே சாதிக்க முடியாத காரியத்தை இந்தியினாலே சாதிக்க முடியும்என்று இளிச்சவாயர்களை நம்பவைக்கச் செய்யவேண்டும். அதற்குப் பிறகு அவர்கள் தலையைத் தடவலாம் என்ற சதித்திட்டம் தவிர, இதற்கென்ன காரணம் காட்டுகிறார்கள் ?

தமிழ் மொழியினுடைய வல்லமைகளையெல்லாம் நம்முடைய நண்பர்கள் எடுத்துச் சொன்ன நேரத்தில் — ஆங்கிலத்தைப் பற்றியும் எடுத்துச் சொன்னார்கள்; ஆங்கிலம்இருந்தால் உலகத் தொடர்புக்குப் போதுமென்றும், 'இந்தி மொழியினாலே உலகத்தொடர்பும் ஏற்படுத்திக் கொள்ளலாம்; மாநிலங்களுக்குள்ளே தொடர்பும் ஏற்படுத்திக் கொள்ளலாம்' என்றுவாதாடுகின்ற பண்டிதநேருவினுடைய பேரப்பிள்ளைகள், எங்கேபடிக்கிறார்கள் ? என்றுகேட்கிறேன்

இன்றையத்தினம் இந்திப் பள்ளிக்கூடத்திலா படிக்கிறார்கள் ? ... இல்லை! சுவிட்சர்லாந்து நாட்டிலே படித்துக் கொண்டிருக்கிறார்கள். பெரிய பெரிய காங்கிரஸ் தலைவர்கள் நியாயப்படி பணம் கிடைத்தால் இங்கே படிக்கவைக்கின்றார்கள். அநியாயத்திலேபணம் கிடைத்தால் உடனே பிள்ளைகளை அமெரிக்காவுக்கு அனுப்புகிறார்களே தவிர, இந்தி 'ராஷ்ட்ர பாஷா' பள்ளிக்கூடத்திலா படிக்க வைக்கின்றார்கள் ?

அவரவர் ஆதிக்கத்தைச் செலுத்துவதற்கு எந்த மொழியைக் கற்றுக்கொள்ள வேண்டுமோ அதற்கு உலகமெல்லாம் அலைகின்றார்கள். நம்முடைய நாட்டு மக்களுடைய தலையிலேதான் இந்தியைத் திணிக்க வைக்கின்றார்களே தவிர. அவர்கள் ஒன்றும் இந்தியிடத்திலே அவ்வளவு அக்கறை எடுத்திருக்கின்றார்கள் என்று அர்த்தமல்ல,

—ஆகையினாலே இந்த மாநாட்டிலே நாம்தீர்மானித்துக் கொள்ளவேண்டியதும் நாம் திட்டம் தீட்டிக்கொள்ள வேண்டியதும் இந்திமொழி எந்த முறையிலே புகுத்தப்பட்டால் — திணிக்கப்பட்டால் எந்த முறையிலே அதை எதிர்க்க வேண்டும் ? எந்த முறையிலே அந்த இக்கட்டிலேயிருந்து விடுபடவேண்டும் ? அப்படி விடுபடுகின்ற கிளர்ச்சி நடைபெறுகின்ற நேரத்தில் உங்களிலே எத்தனை பேர் ஈடுபாடு கொள்ள இருக்கிறீர்கள் ? இன்றையத்தினம் சித்தமாக இருக்கின்றீர்களா — என்பதுதான் !

மாநாட்டிலே உட்காருகின்ற நேரத்தில் ஆயிரம்பேர் சித்தமாயிருக்கலாம். மாநாடு கலைந்துவெளியேசெல்லுகின்ற நேரத்தில் போலீஸ் ஸ்டேஷனைப் பார்த்தவுடன் ஆயிரம் பேரிலே ஐந்தாறுபேர் கலைந்து போகலாம்; இருநூறுபேரிலே போராட்டம் என்று வருகின்ற நேரத்தில் இருநூறு பேர் மிஞ்சலாம்; மற்றவர் போய்விடக்கூடும் — அந்தக் கணக்கை நான் அறியாதவனல்ல.

ஆகையினாலே அவசரப்பட்டு நீங்கள் முடிவெடுக்காதீர்கள்; ஆரஅமர சிந்தித்துப் பாருங்கள். இந்தி மொழியினுடைய ஆதிக்கத்தைத் தடுத்துத் தீரவேண்டுமென்றால் எடுக்கக்கூடிய அறப்போராட்டம் எந்த அளவுக்கெல்லாம் செல்லக் கூடுமென்பதை நாட்டிலே இன்றையத்தினம் நடைபெறுகின்ற நானாவிதமான காரியங்களைப் படித்துப்பாருங்கள்.

...தி. மு. கழகம் இந்த இந்தி எதிர்ப்பு இயக்கத்தைத் தலைமை தாங்கி நடத்தப் போகின்றது என்ற செய்தியைக் கேள்விப்பட கேள்விப்பட, இந்தி எதிர்ப்பு இயக்கம் இதற்கு முன்னாலே என்னென்ன போராட்டம் நடத்திற்று என்பதையெல்லாம் படித்துப்பார்த்து, "ஒரு ரயில் நிற்கவேண்டும்" என்று சொன்னவுடனேயே ஐந்தாயிரம் தோழர்களுக்கு மேல் சிறைச்சாலைக்குச் சென்றார்கள் என்ற நம்முடைய வீர வரலாற்றை — துப்பாக்கிக் குண்டைக் காட்டி "அதோ போகிறான் கருணாநிதி, சுடு..." என்று சொன்ன நேரத்திலும் கலங்காமல் நின்றவர்கள் நம்முடைய இயக்கத்திலேஏராளமாக இருக்கின்றார்கள் என்ற வரலாற்று உண்மையை அறிந்திருக்கின்றவர்கள் இந்தப் பட்டியல் வளர்ந்தால், நான் உங்களுக்குத் தெளிவாகச் சொல்லுவேன் — எவ்வளவுதான் வீரதீரமாக அவர்கள் பேசினாலும் கீழே இறங்கிவரத்தான் செய்வார்கள்.

ஆகையினாலே நமக்குள்ளே அந்தக் கட்டுப்பாட்டுணர்ச்சி வளருவதற்கும், வீர உணர்ச்சியை நாம் பெருவதற்கும்இன்றைய மாநாடு பயன்படவேண்டுமென்பதற்காகத்தான் இந்தி எதிர்ப்பு மாநாட்டை இங்கே நண்பர்கள் கூட்டியிருக்கின்றார்கள்.

திரௌபதை துகில் கட்டுவதா இல்லையா என்பதைத் தீர்மானிக்க வேண்டியவன் துச்சாதனன் என்றால். திரௌபதைக்கு என்றையதினம் துணி கிடைக்கும் ? அதைப்போல தமிழனுக்கு இந்தி வேண்டுமா ? வேண்டாமா ? என்பதை வடநாட்டுக்காரன் தீர்மானிப்பதென்றால் நம்முடையதமிழ்மொழிஎப்படித் தப்பும் ? திரௌபதிக்கு எந்தத் துகில் தேவை என்பதை தருமன் சொன்னால் ஏதோ கொஞ்சம் நாட்டுச் சேலையையாவது வாங்கித் தந்திருப்பான்: அர்ச்சுனன்சொன்னால் கொஞ்சம் அலங்காரச் சேலை வாங்கிக் கொடுத்திருப்பான். துரியோதனனோ, துச்சாதனனோ சொன்னால் எந்தச் சேலை கிடைத்திருக்கும் ? இருக்கிற சேலையையும் உருவியவர்களல்லவா அவர்கள் ?

அன்னியருடைய வழிகளெல்லாம் நமக்குத் தேவையில்லையென்றால், இரயில் அன்னியன் கொடுத்ததுதான்; கார்டு - கவர்களை அன்னியன் காலத்திலேதான்பார்த்தோம் தபால் — தந்தி அன்னியன் காலத்தில்தான் கிடைத்தது; ஆப்பரேஷன், இஞ்செக்ஷன் அன்னியன் காலத்தில் வந்தவைதான். இவைகளெல்லாம் இருக்கலாம் — ஆனால், அவர்களுடையமொழிமட்டும் இருக்கக்கூடாது என்று எடுத்துச் சொல்லுவது எந்தவாதம் என்பது எனக்குப்புரியவில்லை,

நான் உங்களிடத்திலே பிரச்சினையை விளக்கிவிட்டேன்; நாட்டு நிலைமையை எடுத்துச் சொல்லிவிட்டேன், போராட்டத்தின் அவசியத்தையும் சொல்லிவிட்டேன்; அந்தப் போராட்டத்துக்குரிய திட்டத்தை இந்த மாநாடு தீட்டித்தரும் என்ற நம்பிக்கை மூலம் உங்களிடமிருந்து விடைபெறுகிறேன்.

★

# இந்தியின் 'பூர்வோத்ரம்'

★

கி. பி 1100 முதல் 1400 வரை. வேற்றுநாட்டு இஸ்லாமிய மன்னர்கள் பலர் அடிக்கடி வட இந்தியாவின் மீது படையெடுத்து, இறுதியில் டில்லியில் தங்கள் அரசாட்சியை நிலைபெறச் செய்யலாயினர்.

இங்ஙனம் ஏறத்தாழ 600 ஆண்டுகளுக்கு முன்னால் டில்லியிலும் அதனைச் சுற்றியிருந்த பகுதிகளிலும் இஸ்லாமிய அரசு நிலை பெற்ற காலத்தில், அந்தப்பகுதிகளில் வடமொழிச் சிதைவான ஒருவகை மொழிகள் பேச்சு வழக்கில் இருந்து வந்தன. அந்த மொழிகள் இலக்கண இலக்கிய வளம் பெற்றிருக்கவில்லை. அதுவரை அந்த மொழிகளில் சிறந்த கவிஞர்களோ. இலக்கியக் கர்த்தாக்களோ தோன்றி எத்தகைய உயிரோவியங்களையும் தீட்டினார்களில்லை.

அடிக்கடி ஏற்பட்ட படையெடுப்புகளின் காரணமாகக் கண்டபடி சிதைவுற்றுச் சீர்கேடு அடைந்து எழுத்து வடிவம் பெறாமல், சிறந்த இலக்கியங்களும் இல்லாமல், பேச்சு வழக்கில் மட்டும் நடமாடிக் கொண்டிருக்கும் நலிந்த வாழ்வைப் பெற்றிருந்தன அம்மொழிகள்.

ஆசிரியர் மறைமலையடிகள், அவர் இயற்றியுள்ள 'ஹிந்தி பொதுமொழியா ?' —என்னும் அரிய நூலில் அழகுபட எடுத்துக் காட்டியுள்ளதைப்போல, டில்லி நகரத்நில் தங்கள் ஆட்சியை நிலைநாட்டிய வேற்று நாட்டு இஸ்லாமிய அரசர்கள் தங்களுடன் கொண்டு வந்த அரபிமொழி — பாரசீகமொழிச் சொற்களை டில்லியில் அதுபோது வழங்கிவந்த மேற்குறிப்பிட்ட பல்வேறு பேச்சு மொழிகளோடு கலந்து வழங்கலாயினர். அந்தக் கலவையிலிருந்து பிறந்த மொழிதான் உருது என்னும் பெயர்பெற்று நடமாடலாயிற்று.

உருது என்னும் சொல்லுக்குப் பொருள் மறைமலையடிகளார்குறிப்பிடுவதைப்போலபாடி அல்லதுபாசறை படைவீடுஎன்பதேயாகும். இஸ்லாமியஅரசர்கள்தங்கள் பாசறைகளில் பேசிய கலவைமொழிதான உருது ன்பதை இந்தச் சொல்லும் இதன் பொருளும் நன்கு விளக்குகின்றன

இங்ஙனம் டில்லியில் வழங்கி வந்த வடமொழிச் சிதைவான ஒரு வகை மொழிகளோடு அரபி... பாரசீகச் சொற்கள் கலந்து உருவாகிய உருது மொழியில், நாளாக ஆக அரபிச் சொற்களும் பாரசீகச் சொற்களும் மேலும் மேலும் கலந்து அந்த மொழியின் வடமொழி அடிப்படையே நாளடைவில் முற்றிலும் மறைந்து விட்டது.

இந்நிலையில் அம்மொழி, இந்துக்கள் இஸ்லாமியர் இரு சாராராலும் பேசப்பட்டு வந்தாலும்அதனை இஸ்லாமிய மொழி என்று கருதி வெறுக்கும் மனப்பான்மை இயல்பாகவே வடநாட்டு இந்துக்களுக்கு ஏற்பட்டு விட்டது, எனவே அவர்களுக்கென்று தனியானதொரு மொழி தேவைஎன்ற எண்ணம் அவர்கள் உள்ளத்தில் வேரூன்றித் தழைக்கலாயிற்று, தழைக்கவே லல்லுஜிலால், சடல் மிஸ்ரா போன்ற இந்துமத — பெரும் புலவர்கள் ஒன்று கூடி உருது மொழியிலிருந்த அரபி—பாரசீகச் சொற்களையெல்லாம் எடுத்து விட்டு அந்தச் சொற்களுக்குப் பதிலாக வட சொற்களை ஏராளமாகக் கொண்டுவந்து நுழைத்துப் புதியதோர் மொழியை உருவாக்கி, அதற்கும் பெயர்தான் இந்தி என்றும் கூறிடலாயினர், உருது மொழி அரபி எழுத்தில் எழுதப்பட்டு வந்தது! இப்போது லல்லுஜீ போன்றவர்களால் உருவாக்கப்பட்ட இந்தி மொழி; வடமொழி தேவநாகிரி) எழுத்துக்களால் எழுதப் படலாயிற்று. இவ்வாறாக உருது மொழியிலிருந்து அரபி பார்சிச் சொற்கள் விலக்கி வடமொழிச் சொற்களைச் சேர்த்து. உருது மொழியின் அரபி எழுத்தை மாற்றி வடமொழி எழுத்தைக் கூட்டி செயற்கை முறையால் உருவாக்கப்பட்ட ஒருவகை விசித்திர மொழிக் கதம்பத்தின் பெயர்தான் இந்தி, எனவே இந்தி மொழியின் மொத்த வயதே 153 தான் ஆகிறது,

(மா. இளஞ்செழியன் எழுதி 1951 இல் வெளியிட்ட "இந்திய அரசியல் திட்டம்" என்னும் நூலிலிருந்து)

## சங்கைக் கரைக்கு...

(12ம்பக்கத் தொடர்ச்சி)

வீழ்த்திக்காட்ட வாள் கொண்டு போராட 'தளபதி' பணியெனக்குத் தாருங்கள்' என்று மாமன்னன் கலைஞரை நோக்கி வேண்டி நின்றார். கூடியிருந்த தமிழ்க் கூட்டம். இம் மாவீரனின் உரைகேட்டு வீர உணர்ச்சி பெற்றனர்; வெற்றி எழுச்சி பெற்றனர்.

தென்றல் நடையாளன்; தேன் தமிழைத் தினம் தருவோன்; குற்றால அருவியென கொள்கையினை நாளும் வற்றாது நமக்களிப்போன்; உளத்தில் ஊறும் எண்ணத்தை எவருக்கும் அஞ்சாது எடுத்துரைப்போன்; கழகத்தின் காவலன்; கலைஞரின் உற்ற தோழன் பேராசிரியர் அன்பழகன், தமிழ்நாட்டின் புதிய வரலாற்றைப் படைப்பதற்கு போர்ப் பாட்டுப் பாடினார் ஆம்! புறப்பாட்டு பாடினார். அப்பாட்டே—

இந்திமொழி ஆட்சியிலா!
இனி
ஏற்கமாட்டோம
ஏற்புடைத்த எங்கள்
இனிய தமிழ்மொழியே
ஆட்சிக்கட்டிலில்
அமர்ந்திட
உறுதிகொள்வோம்;
உறங்கோம்
இனி ஒரு போதும்
இது உறுதி!

எனும் கருத்தமைந்த தீர்மானத்தை முன்மொழிந்துமுழங்கினார். மாநாட்டில் எட்டுத்திக்கும் அது எதிரொலித்தது.

எட்டுக்கோடி தமிழர்களும் ஏகோபித்து ஏற்றுக்கொண்ட ஏகத்தலைவன்; முன்னர் மூவேந்தர் ஆண்ட பூமியைப் பின்னர் நாவேந்தன் கலைஞர் ஆண்டதை பாரே கண்டு பாராட்டியது அல்லவா?

தான்பெற்ற குழந்தையைப் பேணிக்காக்கும்தாயை போல், கண்களை இமைகள் காப்பதுபோல் தமிழுலகம் காத்துவரும் தன்னேரிலாத் தலைவன் கலைஞர் மேடையில் ஒலிபெருக்கியின் முன்னாலே எழுந்து நின்று மக்கள் வெள்ளத்தை நோக்கி தம் உள்ளத்தைக் காட்டுகிறார். தம் அகத்தை காட்டுகிறார். தான் பெற்ற குழந்தையை உச்சி மோந்து உள்ளம் களிப்பது போல்மாநாட்டில் கூடியிருந்த இலட்சக்கணக்கான மக்கள் தாங்கள் அன்றாடம் காணும் அதே தலைவரை; தமிழினத் தலைவர் கலைஞரைக்கண்டதும் களிப்புக் கொண்டனர் கையொலி எழுப்பினர்; அகமும் முகமும் மலர்ந்திட நிமிர்ந்து அமர்ந்தனர்.

சேரன் செங்குட்டுவன் அன்று வடபுலத்து மன்னர் கனக, விசயர் தமிழ் மன்னர்களைப் பழித்தனர் என்பதற்காக படையெடுத்து போரிட்டுப் பணி வைத்தான் என்பது தமிழகத்தின் புகழ்பூத்த பண்டைய வரலாறு!

ஆனால் இன்றும் வடபுலத்தில் ஆளுகின்ற மந்திரிகள் அன்றைய நிலையிலே இருந்து கொண்டு பைந்தமிழ் மொழியின் மீது ஆதிக்கம் செலுத்த அடம் பிடிக்கிறார்கள்.

அன்னைத்தமிழைஅடிமைப் படுத்தவரும் இந்தியை அணை போட்டுத் தடுத்திட; அதை எதிர்த்து அழித்திட அனைத்து தேசிய மொழிகளையும் ஆட்சி மொழி ஆக்கிட வழிசெய்யும் திட்டத்தைத் தீர்மானமாக பேராசிரியர் முன்மொழிந்ததை வழிமொழிந்த தானைத் தலைவர் கலைஞர் அழகு தமிழில் ஆணித்தரமாக அடுக்கடுக்கான ஆதாரங்களை எடுத்துக்கூறி அவையோருக்கு அக எழுச்சி தந்தார்.

போர் முரசாக அவரது ஒவ்வொரு சொல்லும் ஒலித்தது. போர்ப்பாட்டாக ஒவ்வொரு வரியும் இசையோடு நின்றது. அவரதுபேச்சுஉணர்ச்சியை எழுச்சியை கூடியிருந்தோரின் உள்ளத்தில் எதிரொலித்தது.

ஒடுங்கிக் கிடந்த தமிழர் உணர்ச்சி கொண்டனர்; தாய்மொழி தமிழைக்காக்கதமிழ்ப் பண்பாடு தரணியில்தழைத்து ஓங்கிட தமிழினத் தலைவர் கலைஞரின் போர்க்குணப் பேச்சு தமிழரின் உள்ளத்தில் வீரத்தை பாய்ச்சியது; விவேகத்தைஊட்டியது;எழுச்சியை ஏற்படுத்தியது.

கொட்டும் மழையில் நடந்ததுமாநாடு.வரலாற்றில் இது ஒரு கங்கைக்கரையை காவிரிக்கரை எச்சரிக்கிறது காவிரி நதிக்கரையில் கூடிய தமிழ்க்கூட்டம் கலைஞரின் தலைமையில் கங்கை நதிக்கரையின ஆதிக்கத்தை அடக்கியே ஒடுக்கும் கன்னித் தமிழை வருக்கும் அடிமைப் பணி செய்ய இடம் கொடுக்காது. எம்மொழிக்கும் எஜமானாக தமிழ் இருக்கவும் செய்யாது இது உறுதி. இதுவே இறுதியுங்கூட!

திருச்சி மாநாடு கழகத்தின் வரலாற்றுத் திருப்பு முனையாகத் திகழ்ந்துவிட்டது.

ஆட்சி மொழிக் கொள்கையில் கழகத்தின் கொள்கையை ஏற்போம். அதுவே தங்களுடைய கொள்கையாகக் கொண்ட அரசியல் கட்சிகளும் மாநாட்டில் பங்கு பெற்றன.

இரட்டைக்குழல் துப்பாக்கியாக இணைந்து செயல்பட்டு வரும் திராவிடர்கழகம்—அதன் பொதுச் செயலாளர் தோழர் கி. வீரமணி அவர்களும் இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சியின் தலைவர் அப்துல்சமதுவும், பார்வார்டு பிளாக் கட்சியின் தலைவர் ஆண்டித் தேவர் ஆகியோர் மாநாட்டில் பங்கு பெற்றனர். மொழிக் கொள்கையில் தாங்கள் கொண்டுள்ள கொள்கையையும் தெள்ளத் தெளிவாக எடுத்து வைத்தனர்

மத்திய ஆட்சியின் மொழிக் கொள்கையைக் கண்டிக்கும் வகையிலும் நமது நெஞ்சத்தை நாட்டுக்குக் காட்டிக் கொள்ளவும் கழகத் தலைவர் கலைஞரின் ஆணையைஏற்போம். வருகிற ஜனவரி 25 மொழி காக்க தங்களை அழித்துக் கொண்டவர்களை நினைந்து போற்ற நினைவுநாள்! பொதுக் கூட்டம் நடத்துவோம்! தியாகிகளின புகழைப் போற்றுவோம்.

ஜனவரி 26 அன்று இல்லந்தோறும் கறுப்புக் கொடி ஏற்றி வைப்போம்; கருஞ்சட்டை அணிந்து ஊர்வலம் செல்வோம்

அந்த நாளில் தமிழகத்தின் சிற்றூர், பேரூர், நகரங்களில் கருங்கடல் நுழைந்து விட்டதோ என நம்மை உற்றுப் பார்ப்போர் உணரும் வண்ணம் வரலாறு படைப்போம்.

## காட்டூர் கோபால் மறைவுக்கு இரங்கல்!

15—12—78 அன்று இயற்கையெய்திய, தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையின் பொதுச் செயலாளர் திரு. காட்டூர் கோபால் அவர்களின் இறுதி ஊர்வலத்தில் பங்கேற்க, குந்தா மின்திட்டத் தொழிலாளர்கள் சார்பில், தமிழ்நாடு மின்கழகத் தொழிலாளர் முன்னேற்ற சங்க (குந்தாமின் திட்டம்) செயலாளர் பி. பாலசுப்பிரமணியம் தலைமையில், இராஜாங்கம், கிருஷ்ணப்பா, பொன்னையன், பவுல், சையத்ஜாபர், சீனிவாசன், குமரன், கன்னையன், பாலுசாமி, ஆறுமுகம், ஹசன்முகம்மது, இராஜாமணி நடராசன், இராகவேலு, பெருமாள், நஞ்சன், வீராசாமி, நல்லசாமி, சுந்தரம், மற்றும் பலர்

கோவை சென்று மறைந்த திரு. காட்டூர் கோபால் அவர்களின் இறுதி ஊர்வலத்தில் பங்கேற்று தங்களின் இரங்கலையும் தெரிவித்துக் கொண்டனர் என்பதை குந்தா மின்திட்ட தொ. மு. ச. துணைச் செயலாளர் சையத்ஜாபர் அறிவிக்கிறார். (வி-ம்)



# நாகலாந்து - இந்தியாவின் பெரும்பிரச்சினை!..

(நாகலாந்து, இந்தியாவின் தீர்க்கப்படாத பெரிய பிரச்சினைகளில் ஒன்று. அதைத் தனி நாடாக்கக்கோரி தலைமறைவுநாகர்கள்தொடர்ந்து போராடி வருகிறார்கள். புரட்சி நாகர்களின் தலைவரான பிசோவின் முன்னாள் உடன்தோழரான விசோல் என்பவர் இப்போது நாகலாந்தின் முதலமைச்சராக இருக்கிறார். மூன்றாவது நபரின் தலையீடு இன்றி, தலைமறைவுப் புரட்சிக்காரர்களும் மத்திய அரசும் நேரிடையாகப் பேச்சு நடத்த வேண்டும் என இவர் வற்புறுத்துகிறார். 'சண்டே' ஆங்கில இதழுக்கு இவர் அளித்த பேட்டியின் சில பகுதிகள் இங்கே தரப்பட்டுள்ளன.

கேள்வி: அதிக அளவிலான மாநில சுயாட்சியை நாகலாந்திற்கு வழங்குவதால் இப்போதுள்ள பிரச்சினை தீருமென்று நீங்கள் கருதுகிறீர்களா?

பதில்: அதிக அளவிலோ—குறைந்த அளவிலோ—எத்தன்மையான சுயாட்சி ஏற்பாட்டையும் நான் வரவேற்கிறேன். நாகலாந்து இழந்துவிட்ட அமைதியை அது மீட்கும்.

கேள்வி: பிறகு இந்த இயக்கத்தை (தலைமறைவாக இருந்து செயல்படும் இயக்கத்தை) நீங்கள் ஆதரிக்க மாட்டீர்கள்...

பதில்: நாகலாந்துப் பிரச்சினையைத் தீர்க்கக்கூடிய அனைத்து இயக்கங்களையும் நான் ஆதரிப்பேன்.

கேள்வி: விடுதலைகோரும் இயக்கத்தைக் கூடவா ஆதரிப்பீர்கள்?

பதில்: இந்திய அரசு இதற்கு ஒப்புக்கொள்ளுமா? இந்திய அரசு தலைமறைவாக வாழும் நாகலாந்து மக்களுக்கும் ஷில்லாங் உடன்படிக்கையில் கையெழுத்திட்டவர்களுக்கும் அதிக அளவிலான மாநில சுயாட்சி வழங்கவோ அல்லது விடுதலை அளிக்கவோ ஏற்பாடு செய்யுமானால்—இது குறித்து நான் சொல்வதற்கு ஒன்றுமில்லை.

அரசியல் சட்டப்படியான முதலமைச்சர் நான்; அரசியல் சட்ட விதிகளின்படி மாநில ஆட்சியை நடத்திக் கொண்டிருப்பவன். எனக்கும் இந்திய அரசுக்கும் இடையிலான பிரச்சினையைத் தீர்த்துக் கொள்வதற்காக அல்ல — முயற்சிகள் மேற்கொள்ளப்படுவது. இந்திய அரசுக்கும் ஷில்லாங் உடன்படிக்கையாளர்களுக்கும் இடையே ஒரு தீர்வு காணத்தான் முயற்சிகள்மேற்கொள்ளப்படுகின்றன. அது எம்மாதிரியான தீர்வாக இருக்குமென்று எனக்குத் தெரியாது. ஆனால் நாகலாந்தில் நிலைத்த அமைதி நிலவ ஒரு தீர்வுகாண வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

கே: இப்போது நாகலாந்தில் அமைதி நிலவவில்லை என்பதை ஒப்புக் கொள்கிறீர்களா?

ப: அமைதிக்குழு இயக்கத்தினருக்கு நாங்கள் ஆதரவளிப்பதும், தீவிர முயற்சிகள் செய்வதும் நாகலாந்தில் அமைதி நிலவ வேண்டும் என்பதற்காகத்தான்.

கே: தலைமறைவாக இருக்கும் புரட்சி நாகர்களோடு உங்கள் கட்சிக்கு நெருங்கிய தொடர்பு இருக்கிறதென்றும், அவர்கள் காரணங்களையே உங்கள் கட்சி எதிரொலிக்கிறது என்றும் எதிர்க்கட்சியினர் குற்றம் சாட்டுகிறார்களே...

ப: தலைமறைவு புரட்சியாளர்களின் காரணத்தைப் பிரதிபலிக்கிறோம் என்று நான் சொல்லப்போவதில்லை: நாகர்களின் மன உணர்வுகளை நாங்கள் புரிந்துகொள்கிறோம் தலைமறைவாக வாழும் நாகர் இயக்கத்தினரின் மன உணர்வுகளையும் நாங்கள் புரிந்து கொள்கிறோம்! ஏனென்றால் அவர்களும்நாகர்களே. ஒருகாரணத்துக்காக அவர்கள் போராடி வருகிறார்கள். இந்திய அரசாங்கத்தோடு பேசி இப்பிரச்னைக்கு அமைதியான ஒரு தீர்வு காண அவர்களை (புரட்சியாளர்களை நாங்களே இணங்கச் செய்வோம்; இவர்களுக்கும் இந்திய அரசுக்கும் இடையே ஒரு ஒப்பந்தம் ஏற்படாதவரை, நாகலாந்தில் அமைதி நீடித்திருக்கப் போவதில்லை.

கே: பிசோவோடு பேச்சு நடத்தும்படி மத்திய அரசை நீங்கள் வலியுறுத்துகிறீர்கள் என்பது உண்மையா?

ப: தலைமறைவு இயக்கத்தை உருவாக்கியவர் பிசோ, நாகர்களால் அங்கீகரிக்கப்பட்ட தலைவரும் ஆவார் அவர். இந்திய அரசோடு அவரைப் பேச அழைப்பதென்பது எங்கள் முடிவல்ல இந்திய அரசோடு எந்த மக்கள் பேச விழைகிறார்களோ அவர்களின் முடிவு அது,

## இந்தியாலேயே இந்தியா சீர்குலையும்!

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டில் நூற்றுக்கு 36 பேர் பேசும் இந்தி மொழியை, ஏனை அறுபத்து நால்வர் மீது சுமத்தும் கொடுமை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. மாநில மொழிகளை ஆங்காங்கு அரசியல் மொழியாகவும். அவையனைத்தையும் பேரரசின் அரசியல் மொழியாகவும் ஏற்பதே தமக்களாட்சி முறைக்கு ஒத்ததாகும்.

40 இலட்சம் மக்களையுடைய சுவிட்சர்லாந்துமூன்று அரசியல் மொழிகளைக்கொண்டிருக்கையில் 55 கோடி மக்களைப் பெற்ற பாரத நாடு 14 அரசியல் மொழிகளைக் கொள்வது மிகையாகாது.

### ஆங்கிலமே பொதுமொழி

மாநிலங்கட்கிடையே தொடர்பு நிலவப் பொது மொழியொன்று வேண்டுமாயின், இங்கு இரு நூற்றாண்டுகளாகச் செழித்து வளர்ந்து வேரூன்றிய ஆங்கிலமே ஏற்றதாகும். மேலும்,உலகத்தோடு உறவு கொள்ளவும், பெருகி வரும் விஞ்ஞான அறிவைப் பெறவும் அது நன்கு உதவும், ஆகவே, ஆங்கிலத்தை இரண்டாவது மொழியாகக் கொள்ளுதல் இன்றியமையாததாகும்.

# கங்கைக்கரைக்கு காவிரிக் கரை விடுத்த எச்சரிக்கை!




"இந்திக்கு தமிழ்நாட்டில் ஆதிக்கமாம்! — நீங்கள் எல்லோரும் வாருங்கள் நாட்டினரே!"

என்று வேங்கைபோல் தமிழரை விளித்து, திருச்சி திருநகரில் தீரர்களின் மாநாடு ஒன்று கூட்டி,

எப்பக்கம் வந்து புகுந்துவிடும் — இந்தி எத்தனை பட்டாளம் கூட்டி வரும்?

என்று அரிமா முழக்கம் செய்தார் நம் தமிழினத் தானைத் தலைவர் டாக்டர் கலைஞர்.

தமிழினத்தைத் தட்டி யெழுப்பித் திரட்டிட அவர் மடல் தீட்டவும் திருச்சியிலே கூடியது திண்தோள் தீரர்கள் கூட்டம்

கழகத்தின் காளையர் காவிரிக்கரையில் கூடியது, கங்கைக் கரை ஆதிக்கத்தைக் கலங்க வைத்திருக்கும் என்பதில் ஐயமில்லை

"மங்கை ஒருத்தி தரும் சுகமும் எங்கள் மாத்தமிழுக்கு ஈடில்லை" என்று மார்தட்டி, தடந்தோள் உயர்த்திப் போர் முரசு கொட்டி மறத்தமிழர் கூடினர் அண்ணா சிலையருகில் ஆயிரக் கணக்கில் அல்ல; அல்ல, இலட்சக்கணக்கில்; ஆம் அது இலட்சியக் கூட்டமல்லவா?

ஊர்வலத்தில்—பெருந்தோ ஐந்நூறுக்குமேல்கார்களுக்கோ கணக்கில்லை; ஆட்டோரிக்ஷா; அடுத்தடுத்து சைக்கிள் ரிக்ஷா ஆயிரத்துக்கு மேலாம். மோட்

**லெனின்**

டார் சைக்கிள்! அவை மட்டுந்தானா? சைக்கிள்களும் சாரை சாரையாக.

இத்தனைக்கும் முத்தாய்ப்பு வைத்ததுபோல் ஊர்வலத்தின் நடுவினிலே ஊராண்ட எம் தலைவர் தேரினிலே வலம் வந்தார்.

காவிரிதான் கரை புரண்டு நகருக்குள் பாய்ந்ததுவோ என வியக்கும்படி இருந்தது வீரர்படை. மக்கள் வெள்ளம் நத்தையைப்போல் ஊர்ந்ததுவாம்.

வானத்தாய் தமிழ்காக்கும் படை கண்டு களிப்பாலே மழைக்கண்ணீர் பொழிந்திட்டாள்.

சோழர்குல மாமன்னன் கலைஞர்பிரான் பவனிவந்தார்: அம்மன்னர்க்குத் தளபதியாய்ப் பேராசான்அன்பழகன் துணையான தளபதிகள் சாதிக்கும், ஆசைத்தம்பியும் அன்பிலும், ஆற்காட்டாரும் கோவிந்தப் பெரும் புலவன்; இளம் விரன் காபாலசாமி — இத்தனை பேர் புடைசூழ ஐந்தாறு இலட்சம் படைவீரர் போர்ப்பாட்டுப் பாடிவர, புறநானூறு படைத்திடவே புறப்பட்டார் அறப் பார்க்களம் எனும் மாநாட்டுத் திடல் நோக்கி!

நகர் மக்கள் வாழ்த்தோடு நகர்ந்ததுவாம் 'வீரம்'தான். ஊர்வலம் காணும் வீ ிகளோ — வரவேற்புக் கூறிடும் தோரணங்கள் அணிகளோடு. பதாகைகள் பாராட்டுப் பாடிட வரவேற்புமடல்களெனவாழ்த் தொலித்து நின்றனவாம்.

மன்னன் வருகையினை மையிட்ட மடவார்கள் மலர் சொரிந்து வரவேற்றார்கள்.

வயது முதிர்ந்தோர் வாயார வாழ்த்தி நின்று ஆண்ட பெருமகனை மீண்டும் ஆள வர வேண்டுமென்று 'ஆசி' கூறி நின்றார்.

புறப்பட்ட ஊர்வலமோ போய் அடைந்ததுவாம் மாநாட்டுத் திடலை. ஆனால் ஊர்வலத்தின் மறுமுனையோ புறப்பட்ட இடமிருந்து நகரடியாத நிலைதானும்! அம்மம்மா! அது மேற்கு மலைத் தொடர்ச்சிதானோ!

அறுபத்தைந்தாம் ஆண்டு தனில் மூண்டது மொழிப் புரட்சி. அப்போது தங்களுடைய தேக்குமர தேகத்துக்கு இளைஞர்களோ எண்மர் தீயிட்டுக் கொண்டனர். வெந்தணலில் மாய்ந்தபோது ஓடிய இரத்தம் ஒரு பக்கம்.

தன்மார்க்க துரைத்தனத்தாரின் துப்பாக்கிக் குண்டுகள் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்களை துளைத்தபோது கொட்டிய இரத்தம் தமிழ் மண்ணை செங்குழம்பாக்கியிருந்ததை

கொட்டிய மழையில் மாநாட்டுத் திடலும் செங்குழம்பாகிக் கிடந்தது நினைவுப் படுத்தியது.

கடல்தானோ மாநாட்டுத் திடல்? தென்னங்கீற்றின் தடுப்பெல்லாம் அதன் கரை தானோ? நுழைவாயில் — அது கரிகாற் பெருவளத்தான் கட்டிவைத்த கோட்டை தானோ என்று வியக்கும் வண்ணம் கைவினைஞர் வேலைப் பாட்டால் உருவான தன்னை, பனை ஓலையால் முடைந்த முகப்பு. இல்லை! இல்லை! அது கற்கோட்டையின் நுழை வாயில்.

ஆறு வந்து கடல் புகுந்து அணைந்தாற்போல் மாநாட்டுத் திடல் தனிலே நுழைந்தது வாம் ஊர்ந்து வந்த ஊர்வலமே!

மாநாட்டு முகப்பில் களம் பல கண்ட கோவிந்தனுர் கழகக் கொடியினை ஏற்றுவித்தார் மக்கள் கரவொலிக்கிடையே. அது பட்டொளி வீசி வானை முட்டிப்பறந்து கொண்டிருந்தது:

அறப்போர்க்களம் அமைக்கும் ஆற்றல் மறவர் அன்பில் வரவேற்புரை நிகழ்த்த அதுகேட்டு மறவர்குல மக்கள் கூட்டம் மகிழ்ச்சிப் பெருக்கில் மாந்தித் திளைத்தது.

மாநாட்டுத் திறப்பு விழா — மறவர்குலத்துதித்த திருமகனும் கட்டபொம்மன் உருநிகர்த்த சிம்மக் குரலுடையோன் கோபாலசாமி முழக்கமிட்டார்.

அவ்வுரைகேட்டு தமிழ்க் குல மக்கள் வீறுகொண்டுநின்றனர். திண்தோள் தினவெடுக்கப் போர்குணம்கொண்டனர். வடமொழியின் அடிவருடிகளெல்லாம் இடியோசைக்கேட்ட நாகம்போல் அஞ்சி நடுங்கினர். ஆமாம். இது உண்மை

களம் கண்ட வீரர் தமிழ்ப் புலவர் கோவிந்தனுர் தலைமையுரை — அதில் அனுபவ முத்திரை அலையென மூந்தது.

நாடாளும மன்றில் வடவரை நடுங்க வைக்கும் நாவன்மை மிக்க ஆசைத்தம்பியும், முரசொலிக்கும் மாறனும் மாநாட்டில் கூடியிருந்தோரைக் குன்றென உறுதியாக்கினர். தமது அடுக்கடுக்கான ஆதாரங்களால். தானைத் தளபதியே! போருக்கு ஆணையிடுக என வேண்டி முழக்கமிட்டார் சாதிக். அவரைத்தொடர்ந்து அவையில் இருந்த முன்னணி வீரர் சிலரும் முழக்கமிட்டனர்.

எண்பதாண்டு வயதைதளட்டிப்பிடித்த முத்தமிழ் காவலர் கி. ஆ. பெ. மூப்புத் தட்டினும் இளமை முறுக்கோடு இடியென முழங்கினர்.

என் சிந்தை அணு ஒவ்வொன்றும் செந்தமிழ் காக்க வந்துற்ற இந்தியினை வெளியேற்ற; அதன் ஆதிக்கத்தை

(தொடர்ச்சி 11-ம் பக்கம்)



திருச்சி இந்தி எதிர்ப்பு மாநாட்டின் முகப்புத் தோற்றம்

திராவிட முன்னேற்றகழகத்திற்காக ஆசிரியர் மு கருணாநிதி அவர்களால், அழகிரி அச்சகத்தில் (156 சூரியநாராயண செட்டி தெரு, இராயபுரம் 60.0013) அச்சிட்டுவெளியிடப்பட்டது. நிர்வாக அலுவலகம், அன்பகம் 508 அண்ணாசாலை, தேனாம்பேட்டை சென்னை-600018 தொலைபேசி: 441009